# ஞானபோதினி.

ஸம்புடம் III. } 1899௵ செப்டம்பர்௴ 20௳ { புத்தகம் II.

## மதிவாணன் கதை.

### XI - ஆம் அத்தியாயம்.

புரவியேற்றிப் போன முருகனோ காவலனெறியுண்டு கிடந்த களங்குறுகி வினவியபோது பிக்குணிக் கோலம்புனைந்து வீடுகடோறும் ஐயமேற்றுச் செல்லாநின்றகரவாளனொருவன் கரவாளினெறிந்து பொள்ளென மறைந்து போயினனென்றார் அவ்வயின் நின்றார். உதுகேட்ட காவலர் தலைவன் பரியினின்றிழிந்து ஆயிடை நிகழ்ந்தனவற்றை யெல்லாம் நன்னர் நோக்கிய பின்றைப் பிக்குணிக்கோலம் புனைந்து போந்தான் எவ்வழிப்போந்தன னென்பதனையும் எவ்வெவ் வில்லங்கடோறும் ஐயமேற்றன னென்பதனையும், காவலன் புலவர் வீட்டு வாயிலினிற்புழி அக்கயவன் எவ்விடம் நின்றன னென்பதனையும், அவனது உயரம் நிறம் தோற்றம் முதலியனவற்றையும் பற்றி ஆய்ந்தறிந்து கொண்டனனன்றி அத்தீயோன்றன் அடிச்சுவடுகளைக் கண்டு குறித்துக்கொண்டு பிக்குணிக் கோலப் பேய்மகன் சென்ற திசைவழிச் சில காவலரையேவி நேடுமா விடுத்துத் தான் வேலவர்தம் இல்லத்தை நோக்கிக் கனவட்டமிவர்ந்து கடுகிச் சென்றனன்.

முருகன் வகுத்துரைப்ப நடந்தசெய்தி யனைத்தையுங் கேட்ட வேலவரும் மாயவன் மாட்டுவெறுப்பு மீக்கூர்ந்து 'என்னணமேனும் மாயவனைக் காவலிற் செறிக்குதும்' என்றுறுதி பூண்டெழுந்தனர்.

இடையிற் சென்ற காவலரோ பொய்ப்பிக்குணிக் கோலத்தான் றன்வேடத்தை மாற்றிவிடுவானெஃபதனை மறந்தனராய்

வழிக்கட்டிரிதந்த பிக்குணிகள் யாவரையும் பற்றிக் காவலிற்செறித் தனர். இனிவேலவமுருக ரிருவரும் வேற்றுக்கோலங் கொண்டு கொய்யுளைக்கலிமா வேறித் தென்மேற்றிசையிற் சென்று திருப் பரங்குன்றுக் குற்றுத் துருவத்தலைப்பட்டனர்.

இவ்வாறிவர்கள் தேடாநிற்ப மாயவனோ பரங்கிரிக்கருகிலு ள்ள கூத்தியர்குன்ற மென்னுஞ் சிற்றூரின்கண் ஒரு நாடகக் கணி கையினில்லத்தினுற்றுக் கட்டிலிற் படுத்துக் கவலையற்றுறங்குவானு யினன். சிறிதுநேரத்தினுளெல்லாம் ஆயிடையே ரரவமெழும் பிற்று. அஃதென்னென அக்கணிகையும் விசாரிப்பச் சென்ற னள். சென்று மாயவனைத் தேடிப் பிடிப்பான் காவலர் ஊரூராய்ப் போய் வீடு வீடாய்ச் சோதிக்கின்றன ரெனக் கேள்வியுற்றனள்; மனங்கலங்கினள், பெருமூச்செறிந்தனள், 'ஐயகோ! - யாவரேனும் என் மீதும் ஐயங்கொள்ளுவாரோ?' என்று பயந்து தன் மனோவிகா ரங்களை வெளிக்காட்டாது உள்ளடக்கினள்; இனி யவ்வயின் நிற்றலும்நேரி தன்றென வீட்டைநோக்கி விரைந்து செல்லுமாறு அடியெடுத்துவைத்தவள் 'அம்மவோ! நான் விரைதல்பற்றி யை யப்படி னென்செய்வது' என்று சிறிது மெல்லென நடந்தனள். அப்போழ்தத்து மாயவனது நிலைமை நினைவிற்கு வரலும் எடுத் தடிவைத்தேகினள். இந்நாடகச் கணிகையின் செயல்களையுற்று நோக்கிக் கொண்டிருந்த வொருகாவலன் பிறர்காணாது அவளைப் பின்பற்றிச் சென்றான். சென்ற கணிகையோ மாயவனை யெழுப்பி "மறைதி! மறைதி! நின்னைநேடுகின்றனர்" என்றனள். இச்சொற் கள் செவிப்பட்ட மாயவன் எழுந்தனன் புனைந்தனன் பறையர்தங் கோலம்! கைப்பறை யெடுத்துக் கணகணென்றடித்துப் பொய்ப் பறை யனுமுடன் போந்தனன் வெளியில். எதிர்கண்ட காவலர் அவனை யயிர்த்து "ஒ! பறையோய்! நீ யெம்முடன்போதுதி. அல்லாக்கால் நின்னைச் சிறையகஞ் செறிப்பாம்" எனறனர். "ஒ! நும்முடன் போதுதற்கென்னை? இழிகுலத் தேனையு மொருபொ ருட் படுத்து அழைக்கு நுந்தங்குழூஉவிற்செல்லும் பெரும்பேறு பெற்றேன்" என்றன னெவரையு மேமாற்று மாயவன். உடனே யவனைப் பற்றிக்கொண்டு நால்வர் காவலர் நண்ணினர் மதுரை நோக்கி. பரங்கிரி யருகர்ப் பலர் பறையர் ஓடோடிவந்து "அண்ணா! போதியோ? அப்பா! போதியோ!! ஐயா! போதியோ!! எம்

அரசே ! போதியோ !'' என்று தாங்கொண்டு செல்லும் பறையனை நோக்கி யழுதல்கண்ட காவலர் சிறிது மனமிளகினரேனும் இடங் கொடுத்திலர். இவ்வாறிவர்கள் இடங்கொடுத்தலின்றி மாயவனைப் பற்றிக்கொண்டு செல்லுறூஉம் நெறிக்கட் பசுமலையருகின் எதிரே யெண்மர் குருதிபடிந்த குந்தக்கையினர் போதரக்கண்டு அவரொடும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போழ்தத்து அவர்களுளொருவன் காவலனை நோக்கிக் “கயவருட் கயவனாகிய மாயவனென்னை யிக்கோலங் கண்டனன் ! காண்மின்'' என்று கூறித்தன் னுடலினை யவர்கட்குக் காட்டிநின்றான் ; அவர்களு ளின்னொருவன் “ இவனை மாயவன் குத்திய குந்தம் இது காண்டிர்'' என்று சொற்றுச் செந்நீர் தோய்ந்த குந்த மொன்று காட்டினன் ; அவ்வமயத்திற் கீழ்த்திசையிற் குதிரையேறி விரைந்து செல்லாநின்ற வொருவனைச்சுட்டி மூன்றாவன் “ ஓ ! ஆவயினோடுகின்றனன் மாயவன் ! ஆவயினோடுகின்றனன் மாயவன் !!'' என்று கூயினான். இது கேட்ட காவலரிருவர் அவனைப்பற்றுமாறு ஓடினார்கள். இதற்கிடையிற் பறையர்கோலப் பாதகன் வடமேற்றிசை வழியா யோடிவிட்டனன். கண்ணுற்ற காவலரிருவரும் மாயவனைப் பின்பற்றி யோடினர். பரியாளனைப் பற்றிய சென்ற காவலரிருவரும் போய்ப் பார்ப்புழிக் குதிரை வீரன் முருகனே யென்று தெளிந்து வெட்கமுற்றனரே யன்றித் தாம் போந்த செய்தியையும் நடந்த செய்தியையும் முதலோடிறுதியாக முற்று மொழிந்தனர். இவ்வாறிவர்கள் மொழியக்கேட்டு நின்ற முருகன் செய்மைக் கண்ணே யொருவன் முன்னர் விரைந்தோடுதலையும் அவனைப் பிடிப்பா னிருவர் பின்னர்ச் செல்லுதலையுங் கண்ணுற்று அருகினின்ற காவலரிருவரையுந் தன்னொடுகடுகி வருமாறு சொல்லிவிட்டுத் தனதுகலிமாவினைத் துனைவிற் செல்லும்வண்ணந் தூண்டிச் சென்றனன்.

இஃதிவ்வாறாகப் பறையர் கோலத்தொடு மோடிப்போன மாயவன் மாடக்குளத்தினிறங்கி மடைப்புழையிற் புகுந்து மதகினீர் தாங்குமோவின்கீ ழொளித்துக் கொண்டனன். பின்பற்றிச் சென்ற காவலரோ இதனை யறியகில்லாது தவித்தனர். அவ்வயிற் சுற்றிச் சுற்றி வந்தனர் ; ‘ இவ்வழியினேயே யவன் போந்தனன் ; அதற்குளவன் யாங்ஙனம் மறைந்துவிட்டனன் ? இஃதென்னை விந்தை !' என்றுரைத் துளங்கவலா நிற்புழி முருகனும் மற்றையகாவல ரிரு

வரும் போந்தனர். உடனே முருகனும் அவர்தமு ளிருவரைமடை யின் மறுபுறத்து நிறீஇயொருவனை மடைப்புழையுள் நுழைந்து நெடுமாறேவி மற்றொருவனுந் தானுமாய் மாயவனொளித்துக் கொண்டபுறத்தே நின்றனர்.

சிறிது நேரத்திற் கெல்லாம் மடைப்புழையின்கண் நுழைந்து மாயவனை நேடிய சென்ற காவலனுடலம் வெளியே போந்து விழுந்தது; யாவரு மதனை யுற்றுநோக்கிச் சென்ற காவலனிறந்து விட்டன னென்றெண்ணி யுளங்கவன்றனர். இதற் கிடையின் முருகன் நெடியதோரிருப்புச் சலாகை தருவித்து அதனை மடையினுட் செலுத்திக் குத்துவான் புக்கனன். புக்கவளவில் உள்ளிருந்த மாயவன் மடையின் மறுபுறஞ்சென்று வெளியேறினன். உடனே யாண்டு அவனை யெதிர்பார்த்து நின்ற காவலரிருவரும் ஒய்யெனக்கூய் அவன்மேற் பாய்ந்து பற்றலும் அவன் இவர்களைப் பொட்டெனக் கதுப்பினிற் புடைத்து மல்லினிற்கொண்டு பிடித்துப் போர் புரிந்துழிக் காவலனொருவன் காலொடிந்து வீழ்ந்தனன். இத்துணையும் நிகழ்தலை மடையி னிப்புறத்திருந்து கண்ட முருகன் காவலனொடுஞ் சென்று பற்றப்புகுதலும் மற்போர் நின்றது; மாயவன் றலைகுனிந்தனன்; உடனே முருகனும் மாயவனை நோக்கி "என்னே! மாயவ! என்னையுன் னாற்றல்! எம்மனைவரையு மின்னணம் வருந்துமாறு வைத்தனையே! இதன்காரணம் யாது கொல்? வாய்திறந்துரைத்தி" யென்று வினவினன். வினவலும் மாயவனொன்றும் பேசிலன். அஃதுணர்ந்து முருகனும் அவனைப் பற்றித் தளையிடுமாறு கட்டளை யிட்டனன்; இட்டதுகேட்ட மாயவன் "என்னைத் தளையிடுவோன் நீயேயோ? புல்லறிவாள!" என்று கூறி முருகன் மேற்பாய்ந்தனன்; பாய்தலும் பக்கத்திருந்த காவலர் மாயவனைப்பற்றிப் பிடித்து அவன் கைகால்களில் யாப்பிட்டனர்.

பதினோராமத்தியாயம் முற்றிற்று.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி.

———

# தனிப்பாசுரத்தொகை.

## XXXI. கற்பு.

கற்பென் பதுகலை கல்லாமை யன்று ; மற்
றிற்படி கடவா திருத்தலு மன்று ;
தீய வழியினிற் செல்வுழிக் கணவனை
யேயே யிஃதெனை யென்னு திருந்து
வாயிலாப் பூச்சியாய் மன்னுத லன்று ;
மாடுபோ லுழைத்துக் கூடி வாழ்ந்து
காலந் தன்னைக் கழித்தலு மன்று;
கனலி சான்றாய்க் கலந்த தலைவன்
மனையற மாட்சியை மாண்புற வகுத்துக்
கற்பித்த லானது கற்பாம் ; காதலன்
சொற்கட வாதவற் றாநெறி நிறீஇக்
கனவினும் வேறு காளையர் தம்மை
நினையா திருக்கு நேர்மையே
யென்று கூறுப மன்றவான் றோரே.

## XXXII. மனன்.

வாழிய மனனே ! வாழிய மனனே !
ஐம்பொறி யென்னும் பைம்பரி களினிவர்ந்
துலக பாலரி னுலவித் திரிதியால் ;
புதியன வற்றுட் கதுமெனப் புகுதியால் ;
இனியவிவ் வுலகி னிருக்கு மெவற்றுளு
மனிதனிற் சிறந்த மாண்பொரு ளில்லையம்
மனிதன் றன்னுள் வயங்கு மெவற்றினு
மனனிற் சிறந்த மாண்பொரு ளும்மிலை
யென்று கலைஞரா னியம்பப் பெறுதியால் ;
குன்றுறு குரங்கெனக் கூறுவ ரறியார் ;
நினைத்த விடனெலா நினைத்தவந் நொடியினே
சென்று சேர்தியால் ; துன்றிய துணையே !
என்னைநின் விரைவு ! என்னைநின்
னாற்றல் ! என்னாற் சாற்ற லரிதரோ.

## XXXIII. கணவன்.

ஓரிலாட் கோண்முறை யுற்ற தலைவனா
யேருலா மனைக்கொடி யினிது படர்தர
வாய்த்தகோள் கொம்பராய் வான்குணம் பூத்துக்
காய்த்துப் புகழ்நலங் கனிபயன் மரமாய்ப்
பணமணி தன்னைப் பரிவுடன் போற்றும்
பணியென மனைவியைப் பாதுகாக் குநனாய்த்
தன்னில் லாளைத் தனக்கிணை யாய
தலைவியா மதிக்குந் தன்மை யாளனாய்
வயங்குந னலனோ நயங்கொளுங் கணவன் ?
மற்றுள மார மணந்த தையலைச்
சற்றுமரு ளின்றித் தவிக்கிய புரியுநன்
கண்ணவ னேவக் காதலி தனக்குப்
புண்ணவ னென்றே புகல்வர்
மேதகு பொருளிய லோதுர வோரே.

## XXXIV. வாய்மை.

வாய்மையே ! சிறப்பொடு மாட்சிசேர் குணனே !
மேற்கோ ளெவற்றினு மேற்படு மியல்பே !
உள்ளது சொல்லலா முண்மையே ! சிறிதும்
வேறுபா டுறாயா மெய்ம்மையே ! மாந்தர்தம்
மொவ்வே றுறுப்பு மோரணி கலனே
வெவ்வே றாகச் செவ்வே யுடைத்து ;
கண்ணும் வாயு நண்ணுங்கொ லணிகலன் ?
கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மென்ப !
வாயினுக் கருங்கலம் வாய்மைநீ யென்பல்.
அறமெனுங் கடவு ளணிதரு முடியே !
பிறவுயிர் தமக்குப் பெட்பொடு நன்மை
விளைத்தற் கோலினின் னளத்த னேரிதோ ?
என்னணம் பொய்ம்மையாத் துன்னும்
நன்றுந் தீது மொன்றலில வாகவே ?

## XXXV. காமம்.

காமமே ! சுடுதீக் காமமே ! கடல்சூழ்
பூமியிற் றோன்றிய புகையின் கொடியே !
பற்றென் கணிகையர்ப் பெற்றதாய்க் கிழவியே !
அறிவி னொளியினை யறவே மறைக்கு

மாசின் படலமே ! பாசத் தளையினைப்
பூட்டி யாட்டிடும் பொல்லாப் பேயே!
வழிமறித் தடிக்கு மிழிதொழி லாளர்போல்
விழிமருட் டிக்கொடு வீணெறிச் செலுத்திநல்
லுள்ளத் துறுபொருட் பொள்ளெனக் கவர்வோய் !
நின்கையிற் பட்டு நிருபரெத் துணையரோ
நன்கறந் துறந்தனர் ; நங்கைய ரெனையரோ
வீன மெய்தினர் ; ஞான முனிவரர்
மேனிலை குன்றினர் ; வேறென் ?
நினைத்தீக் குணனே நினைத்தலுந் தீதே.

பரிதிமாற் கலைஞன்.

---

# இராமகிருஷ்ணர் உபதேசமொழிகள்.

நாஸ்திகனொருவன் ஆஸ்திகனொருவன் ஆகிய இருவர் ஒரே மார்க்கமாகப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தனர். வழியில் ஒரு பாழ்ங்கோயில் இருந்தது. ஆஸ்திகன் பக்தியோடு கோயிலைப்பிரதக்ஷிணஞ் செய்தான். இதைக்கண்ட மற்றொருவன் இவனை யிகழ்ந்துகொண்டு ஒதுங்கி நின்றான். தற்செயலாய், கோயிலை வலம் வந்த பக்தன் பாதத்தில் முள் தைக்கவும், வெளியில் நின்றவன் முன்பு வெள்ளித்துண்டொன்று கிடக்கவும் நேர்ந்தது. பக்தன் நொண்டிக்கொண்டே திரும்பிவந்து தன் தோழனை யடைந்தான். தோழனோ தான் கண்டெடுத்ததைப் பக்தனுக்குக் காட்டிப் பயனில்லாத பக்தியிற் பயில்வானேன் என்று அவனைப்பரிகாசம் பண்ணினான். பக்தன் நாஸ்திகனது வஞ்சகமொழியினை மனம்பற்றி "ஆனால் தெய்வமொன்றில்லைபோல் தான் தோன்றுகிறது. இருக்குமாயின் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் உண்டாதற் கிடமில்லையே" என்று சொல்லிப்பெருமூச்செறிந்தான். அந்த க்ஷணத்திலே ஒரு பெரியவர் அவ்விடத்துக்கு வந்து ஒருவன் சிரித்துக்கொண்டு நிற்றலையும் மற்றொருவன் அழ மூஞ்சியாய் நிற்றலையும் கண்டு சங்கதியென்னவென்று இருவரையும் நோக்கி விசாரித்தார். நடந்ததை விஸ்தாரமாய்க் கேட்டறிந்த பிற்பாடு, பெரியவர் நாஸ்திகனைப்பார்த்து "கருமப்பிரகாரம் உனக்கு இப்பொழுது ஒரு பெரிய பொக்கிஷக்குவியல் அகப்படவேண்டியதுண்டு. உன் பக்திக்குறைவினால் ஒரு சிறு வெள்ளித்துண்டே கிடைக்கப்பெற்றனை" என்றார். பிறகு, பக்தனை நோக்கி "இந்த ஆபத்காலத்தில் உன்னை யொரு சர்ப்பந்தீண்டவிருந்தது. உன் பக்தி துணை

நின்று அவ்வாபத்தினின்றும் உன்னைக்காத்தது" என்றார், இந்த நியாயம் இருவர்க்கும் சம்மதமாகவே அவர்கள் தங்கள் வழிநோக்கிச் சென்றனர். பக்தன் முன்னையினும் அதிகமாய்ப் பக்தி செய்யத்தொடங்கினான். நாஸ்திகன் தன் வம்புக்கொள்கைக்காகத் துக்கித்தான்.

ஓர் அரசன் விஷ்ணுபகவானுக்குச் சமர்ப்பிக்கும்பொருட்டுப் பெரிய கோயிலொன்று ஆடம்பரமாகக் கட்டி, அதற்கேற்ப ஆடம்பரமாய்ப்பூஜை தொடங்கும் நாள் ஒன்று சோதிடரைக்கேட்டு நியமித்தான். கும்பாபிஷேகத்தின் பொருட்டு அளவுபடாத திரவியம் வேறெடுத்து வைத்து, பக்கத்து ராச்சியங்களில் உள்ள ஜனங்களையும் அரசர்களையும் அழைத்தற்கு வேண்டிய ஏற்பாடு செய்துகொண்டிருந்த அரசன் சொப்பனத்திற் பகவான் தோன்றி "ஓர் ஏழைக்குயவன் தன்னுடைய இருதயத்தில் எனக்காக ஆலயமொன்று கட்டி, உன்னுடைய கோயிலை என்று திறக்கவேண்டுமென்று நிச்சயித் திருக்கிறாயோ அன்றைக்கே தன் உளக்கோயிலை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டு மென்று தீர்மானித் திருக்கிறான். ஆதலால் நீவேறொரு நாள் தெரிந் தெடுத்துக் கொள். என்னுடைய **பெரிய** பக்தனுக்கு அகிதஞ் செய்ய நான் ஒருப்படேன்" என்றார். அரசன் காலையில் விழித்துக்கனவைச் சிந்தித்துச் சொல்வான் "நான்மூடத்தனமாய்ப் பெருமை பாராட்டிக்கொள்ளும் என்னுடைய கோயிலைப்பார்க்கிலும் ஏழைக்குசவன் மனக்கற்பிதக்கோயிலை பகவானுக்குப் பரிசுத்தமுள்ளதும் உகந்தது மாயிற்று. ஆ! சம்பத்தைப் பார்க்கிலும் அந்தரங்கபக்தி எவ்வள வுயர்ந்தது!" இவ்வாறு சொல்லிக் கொண்டே அரசன், குயவனிருக்கும் ஏழைக்குடிசையைத்தேடிப் பிடித்து அவன் காலில் விழுந்து தன்னைச் சீஷனாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான்.

ஒரு தத்துவஞானியைக் கடவுளின்லக்ஷண மென்ன வென்று சிலர் கேட்டார்கள். அவர் இந்தக் கேள்வியை யோசித்துச் சொல்வதற்கு மூன்று நாள் வேண்டு மென்றார். நாலாம் நாள் அக்கேள்வி திரும்பக் கேட்கப்பட்டபொழுது இன்னும் மூன்று நாள்வேண்டும் என்றார். அதன்பிறகு கேள்வி மீட்டுங் கேட்கப் பட்டது. அப்பொழுது இன்னும் மூன்று நாள் வேண்டு மென்றார். கடைசியில் "எவ்வளவு தூரம் அதைப்பற்றி யோசிக்கிறேனோ அவ்வளவு தூரம் விஷயம் கஷ்டமாகி, இன்னதென்று வரையறுத்துச்சொல்லக் கூடாததாயிருக்கிறது" என்று சொன்னார்.

உமாபதி.

---

# பர்த்ருஹரி.

## I நீதிப்பால்.

### 6. மேலோர்நெறி.

நல்லோர் சேர்க்கையில் ஆசையும், பிறர் குணத்தில் விருப்பும், குருவினிடத்து வணக்கமும், கல்வியில் அவாவும், தம்மனைவியி னலத்திலின்பமும், பழியினச்சமும், பரமடனித்துப்பக்தியும், தமக்குப் பரிபவம் நேர்ந்துழிப் பராக்கிரமும், தீபோரினத்துப்பிரிவும், ஆகிப இக்குற்றமற்றகுணங்கள் எவரிடத்துள்ளனவோ அப்படிப்பட்ட மகாபுருஷரே யாவராலும் வணங்கற்பாலார். மனமடங்குதலும், வேதாந்தவிசாரமும், நல்லோர்சேர்க்கையும், இவற்றானாகும் சந்தோஷமும் ஆகிய இந்நான்கும் பேரின்பவீட்டின் தலைவாயில் காப்போராம் எனவும், மகத்ஸேவையே முக்திக்கு த்வாரம் எனவும் கூறியவாறு, பெரியாரைத் துணைக்கோடலே வீடுபேற்றுக்கு வழியாம். இம்மையில் அடக்கத்தைச்செய்து, புகழையுண்டாக்கி, மறுமையில் உயர்கதியிலுய்ப்பவராய் நல்லறிவுடையாரே நட்டாரெனப்படுவாரென்றும் கூறப்பட்டுளதே. அதனால் நல்லார்நட்பே கொள்ளத்தக்கது. அல்லார் கேண்மை தள்ளத்தக்கது. சான்றொழுது வழிபடும் தெய்வத்தினிடத்துச் செய்வதுபோலக் குருவினிடத்தும் எவனொருவன் நிர்மலபக்தியைச் செய்கின்றானோ அந்த மஹாத்மாவுக்கு எல்லாப்பொருளுங் கைகூடும் எனவும், ஒருவனுக்குக் குருவே பிரமன், குருவே திருமால், குருவே சிவனாம். ஆதலின் அக்குருவையே நமஸ்கரிக்கின்றேன் எனவும் சொல்லியிருத்தலால் "குருவாய்மொழியே திருவாய்மொழி" யென்றும், "குருப்ரசாதமே வரப்ரசாதம்" என்றும் எண்ணி அக்குருவினடியைக் கனவிலுமறவாமல் அவருக்கு வந்தனைவழிபாம் தவறாதியற்றி அவரருளை நாடல்வேண்டும்.

இன்னணம் நல்லொழுக்கங் கொண்ட அறிவுடையார்க்கு ஆபத்தில் தைரியமும் செல்வத்தில் பொறுமையும், வேந்தரவைக்கண் பேசுந்திறமும், போரில் புறங்கொடாமையும், புகழ்த் தேட்டத்தில் விருப்பமும், கல்வி கேள்விகளில் ஊற்றமும் இயல்பிலமைந்த குணங்களாம். அன்னோர் கைக்கு ஈகையும், தலைக்குக் குருபாத சேவையும், முகத்துக்கு வாய்மையும் மனத்துக்குத் தூய்மையும், புயத்துக்கு வீரமும், செவிக்குக் கேள்வியுமே அணியாக அமைந்து அழகு செய்கின்றமையால், அவருக்கு வேறோரணிவேண்டுவதில்லை. பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்கவேண்டுமோ? பூமிக்கு மலைகளும், கடல்களும் மரங்களும் பாரமல்ல; இரப்போர் மனமறிந்து அதனைப் பூர்த்திசெய்ய எவன் பிறவி உபயோகப்படவில்லையோ அவனே

உலகுக்குச் சுமையென்றும், பயமின்மை, சித்தநிர்மலம், தக்கார்க்கீதல், வேட்டல், பிறர்க் கின்னுசெய்யாமை, பொய்யாமை, கோப மின்மை, மனத்தை யடக்கல், கோட் சொல்லாமை, பூததயை, மென்மை, வெட்கம், பெருந்தன்மை, தைரியம், அகத்தூய்மை, செருக்காமை, ஆகிய இக்குணங்கள் தேவர்களடைதற்குரிய சம்பத்தைப் பெறத்தக்க யோக்கியதையுடன் பிறந்தவனுக்குண்டாகின்றன என்றும் கூறப்படலான், கொலை செய்யாமையும், பிறர் பொருள்மேல் மனஞ் செல்லுமிடத்து அதனை யடக்கியாளுதலும், தனக்கியலும் அளவினால் ஈவதும், அந்நியரான பெண்கள்விஷயமான பேச்சில் மூங்கராதலும், குருவினிடத்து வணக்கமும், சகல சாஸ்திரங்களையும் கற்பதும், இன்னு மிவைபோன்ற தூயகுணங்களெல்லாம், சொல்லரிய பெருஞ் செல்வப்பேற்றிற்கு வழியாம். இச்சுப குணங்க ளெல்லாம் மேலோரிடத்தே உள்ளன. ஆனதுபற்றி அவரே எவ்வித மேம்பாட்டிற்கு முரியர்.

ஆபத்திலும், சம்பத்திலும் மேலோருடைய மனநிலை யெத்தன்மையதெனின், தமக்குத் தலைபோகத்தக்க துன்பம் வருங்காலத்தும் அவர்மனம் மலைபோலச் சலியாது உறுதியாய்நிற்கும்; இன்பம் வருங்காலத்தில், மலர்போல் மெல்லியதாகும். இன்னும் அம்மேலோர் பிரியமும் நியாயமுமான வழியில் ஜீவிப்பரேயன்றி அந்யாயார்ஜிதமான பொருளைக்கொண்டு காலங்கழியார். உயிர்போகும் சமயமாயினும் தீய காரியங்களைச்செய்ய ஒருப்படார். அசத்துக்களை யாசியார்; தம்மித்திரனாயினும் அவனை இரவார். அவனும் தனவீனனாயிருப்பனாயின் அவனை ஒருபோதும் இரவார். புலி பசித்தால் புல்லைத்தின்னுமோ? கற்றூண் பெரும்பாரந் தாங்கினும் தளர்ந்து வளையுமோ? அதுபோல் உயர்ந்தோர் பெருந்துன்பம் தம்மேல் வருங்கால் அதற்கு உடைந்து இழிதொழிலைப் புரிவரோ? புரியார். இன்னதொரு கலங்காநிலைமை அவருக்கு இயற்கையா யமைந்ததேயாம். அன்றியும், அம்மேலோர் தானத்தை இடம்பமாகச் செய்யாது மறைவாகச்செய்வர். தமதிருப்பிற்கு அதிதிகள் வருவராயின் அவரைக்கண்டு எங்கே நமது சோற்றில் பங்குக்கு வருவாரோ என்று அஞ்சி தம்வயிறு வளர்ப்பதே பெரிதாகமதித்துக் கதவையடைத்துக்கொண்டுபோகார்.

ஒருரில், உறு கண்வரநலிந்து தன்னையுற்றடைந்தோர்க்கு உதவிசிறிதும் புரியாத உலோபியான வேதியனொருவன் இருந்தனன். அவன் ஒருவரும் வாராத அமயம்பார்த்து உண்பது வழக்கம், இங்ஙனம் அவன் பலநாள் செய்துவராநிற்க, ஒருநாள் அவனினும் மிண்டனான விப்பிரவினொருவன் அவனில்லத்தில் உணவுகொள்ளவந்தனன். அதனையறிந்த அவ்வுலோபி தன் மனையாளை நோக்கி, “அடீ! இஃதென்ன இழவு? இத்தனைநாளும் எப்படியோ விருந்தினர்க்குத் தப்பிவந்தோம். இன்று வந்துள்ள இவ்வதிதி உணவுகொண்டன்றி ஒழியான்போலும். இதற்குச் செயற்பாலதென்?” என, அவ்வில்லாள், “ஸ்வாமீ! யானொருபாயம் உரைப்பேன். அவ்வண்ணம் புரி

யின் இவ்வந்தணன் அகல்வான்: அஃதாவது—நீவிர் என்னையடிப்பவர் போல இந்நெற்கூண்டைத் தண்டங்கொண்டு புடைத்திடுக. யானும் அடி பொறுது அழுபவள்போல நடிப்பேன். இவ்வநர்த்தங்கண்டு விருந்தினன் தானே விலகிடுவான்” என்றுரைக்க, அதனைக்கேட்டு அவள்புருடன், “இஃதொரு நல்லதந்திரம் இயம்பினை” என்று மகிழ்ந்து அவள்சொன்ன வண்ணமே அந்நெற்கூண்டைத் தண்டங்கொண்டுதாக்க, அம்மாயக்காரி ‘ஐயோ! அப்பா!’ என்று கதறி யழுதாள். அதனைக்கண்டு, இவர் செய்வது மாய மென்றறிந்த பார்ப்பானும் வெளியே செல்வான்போலக்காட்டி இடை கழியிற் பதுங்கியிருந்தனன். அப்பொழுது அவ்விருவரும் ‘இன்று நாம்பிழை த்தோம்; வந்தவிருந்தினன் தொலைந்தனன்’ என்று களிகொண்டு உட்புகுந்து உணவுக்கிருக்க, கணவன் மனைவியை நோக்கி ‘யான் உன்னை நோகாமல் அடித்தேன்’ என்றான். அதற்கவள் ‘யான் ஓயாது அழுதேனே’ என்றாள். அவ்வமயத்துப் பதுங்கியிருந்த பார்ப்பானும் ‘யானும் போகாமல் வந்தேனே’ என்று சென்று அன்னம்படைத்த மற்றொருகல்லையின் புறத்திருந்த னன். இங்ஙனங் கொடாமுண்டாரா யிராமல் உயர்ந்தோர் வந்தவிருந்தினர் கருத்தறிந்து உபசரிப்பர். அவர் விருப்பைக் குறிப்பாலறிந்து பூர்த்திசெய் து தாம் செய்த உதவியை வெளியில் விளம்பிக்களிக்காது மௌனங்கொண்டு தமக்குப் பிறர்செய்த உதவியைப் பலர்கூடிய சபையிற் பரக்கப்பேசுவர். பொருள்பெற்று நல்வாழ்வடைந்தகாலத்தும் செருக்குறார். செல்வத்தாற் செருக்குறுவோர் அவமானமடைதல் திண்ணம். பன்னாள் வறுமைப்பிணி யால் வருந்தியலைந்த ஒருவனுக்குத் தற்செயலாய்ச் செல்வம்வந்துற்றபோது தனது முன்னைநிலையை நினையாதவனாகித் தன்னிடம்வந்தோரைச் சிறுமை செய்துவந்தான். ஒருநாள் ஒருபுலவன் அவனுழைச்சென்று ஓராசநத்திருக்க அச்செல்வன் அதுகண்டு பொறாது அப்புலவனைச்சீறி நோக்கி ‘உனக்கும் கழுதைக்கும் எவ்வளவு தூரம்’ என்றிகழ்ந்து கேட்டலும் அவ்வித்துவான் ‘ஒருசாண்தான்’ என்று தன்னிடமிருந்து அவனிடமளவு அளந்துகாட்டினன். ஆனதுபற்றிப் பெரியார்செல்வத்திற் கர்வியார். மேலும் வண்டுகள் பொழில்களின் மலர்களின் மதுவினைப் பருகுதல்போல் உயர்ந்தார் பிறரிடத்துள்ள நற்குண நற்செய்கைகளை மட்டும் எடுத்துரைப்பர். காக்கை பொழிலில் பூத்துச்செழித்த பலமரங்களிருப்பினும் அவற்றைவிட்டு வேப் பங்கனியை உண்ணக் கருதுமாபோல் இழிந்தோர் அந்நியரிடத்து துர்க்குண த்தையும் துஷ்ட கிருத்தியத்தையுமே எடுத்துரைப்பர். ஆகையால் புல்லோ ரைவிடுத்து நல்லோரையடுத் துறவாடவேண்டும். பழுக்கக்காய்ச்சிய இரும் பில் நீர்த்துளியைத் தெறித்தால் நீர் என்னும் பெயரும் அற்றுப்போகின்ற தன்றோ? அந்நீர்த்துளிதானே தாமரையிலைமேல் தங்கியபோது முத்தினது தோற்றத்தை யடைகின்றது. பின்னும் அந்நீர்த்துளி கடலிப்பியின்வாய் விழு மாயின் விலைபெற்ற முத்தாகவே மாறுகின்றது. இவ்வாறே அதம மத்திம

உத்தமர்களின் விருத்தியும் இருக்கின்றது. ஆதலால் மேலோர் சேர்க்கையே கொள்ளத்தக்கது. மற்றும், ஒருவனுக்கு மனைவி மக்கள் சிநேகன் இவர் அனுகூலராயமைதல் புண்ணியத் தாலேதான். 'தந்தை சொன்மிக்க மந்திர மில்லை.' 'தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை' என்னும் முதுமொழிகளைக் கடைப்பிடித்துப் பெற்றோர் சொல்லைக்கேட்டுத் தவறுதிபற்றி, அவர் மன மகிழ ஒழுகும் புதல்வரே நற்புதல்வராவர். தாய் தந்தையர் உயிரோடிருக் கும்போது அவர் வார்த்தைக்குக் குறுக்குச் சொல்லாது அதன்படி நடந்து, அவர் இறந்தபின் வருஷச் சடங்கின் மறுதினத்தில் பூரிபோஜனம் அளித்து, கையில் பிண்டதானஞ் செய்பவனே புத்திரனாகின்றான் என்று சொல்லப் படலாலும், புத்திரன் என்னும் மொழிக்கு புத் என்னும் நரகத்தினின்று பெற்றோரை விடுவிப்பவன் என்று பொருளாதலாலும், அந்நிரயத்தைக்கடத் தித் தன் மாதா பிதாக்களை நற்கதிக் குய்ப்பவனே நன்மகனாவனே யன்றி, தந்தை தாயரைப்பேணி அவரைப் பெருமைப் படுத்தாது, என்னை வருந்தித் தவஞ்செய்து பெற்றாரோ என்று அன்னோரைச் சிறுமைப்படுத்தி தீயொழுக் கங்கொண்ட பிள்ளையும் பிள்ளையோ? அவன் பெற்றோர்க்குப் பெரும்பிணியன்றோ?

மனைவியிருக்கவேண்டியமுறையாவது, கணவன்சொல்லை வேதவாக்கிய மாகக்கொண்டு அவன் மனங்கோணாது அவன் உள்ளமுவக்குமாறு ஒழுகவே ண்டும். படுநீலியாகிய ஒருத்தியைப் பெண்டுகொண்ட ஒருவேதியன் பெரியவ ரொருவரைத் தன்னகத்தில் போஜனத்துக்கழைத்து, தனக்குக் காலையில் வெளியே கிராமகாரிய நிமித்தம்போக நேரிட்டமையால் பெரியவருண்ண வருவதைத் தன்மனையாளுக்கறிவித்துச் சமையல் முதலிய காரியங்களைச் செய்து சித்தப்படுத்திவைக்கும்படி திட்டப்படுத்திவிட்டுப் புறப்பட்டுப் போய்த் தன் வேலைகளை முடித்துக்கொண்டு பதினைந்துநாழிகைக்கு மீண்டு வீடுவந்து சேர்ந்தபோது தன் இல்லாள் இடைகழித்திண்ணையில் முன்றானை யை விரித்துத் தன்கை தலைக்கணையாக்கொண்டு கும்பகருணனை வெல்லக்கரு திப் படுத்திருக்கக்கண்டு "ஐயோ பாவம்! வேலைசெய்த இளைப்பால் படுத்துத் தூங்கிவிட்டாள்" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு உட்புகுந்தான். அங்கு முற்றம் தாழ்வாரமெல்லாம் வைக்கோலும் சாணியுமாய் மெழுகிப்பெருக் கப்படாமல் இருப்பதைக்கண்டு, "இன்று அதிகவேலையை ஒன்றியாகச்செய்ய நேர்ந்தமையின் மற்றவேலைகளைப்பார்க்க அவகாசமில்லைபோலும் ஆயினும் பாதகமின்று" என்று மடைப்பள்ளியிற் புகுந்தபோது நளுக்கென்று எச்சி லிலை காலில் மிதிபடப்பார்த்து "சிறுபெண்ணாயினமையின் இத்துணைநேரம் எவ்வாறு பசிபொறுத்திருப்பாள்; நல்லது பூஜை நைவேத்தியங்கள் செய்து விட்டுப் பிறகு அவளைப்பதிமாற எழுப்புவோம்" என்று பூஜைமுடித்து நை வேத்தியத்துக்குச் சமைத்த பதார்த்தங்களை ஸ்வாமியின் திருமுன்னர்ப் படைக்கும்படி அடுப்பிற்கையைவைத்தபோது அங்கிருந்து ஒரு பூனைக்குட்டி

எழுந்தோட அடுப்பு சிதம்பாமாயிருக்கக்கண்டு மிக்க சீற்றத்தோடு மனைவியிடம் வந்து "அடிபாபி நீ! ஏனடி சமைக்கவில்லை" யென்று கேட்க, அவள் "உங்களப்பன்தான் பாவியாக. நானேன் பாவியாவேன் என்ன," அவன் "அடிமுண்டை! அவர்நல்ல வேதவித்தடி; அவர்திறத்தில் அபசாரப்படாதேயடீ" யென்ன, அவள் "உங்கள் ஆத்தாள் முண்டை; உங்கள் அக்காள் தங்கைகள் முண்டைகளாக. நானேன் முண்டையாவே னென்றுகூற" வேதியன் சினந்து. "என் வீட்டிலிராதி; ஓடிப்போ" என்று செழித்துரைக்க, அவள் "உனக்கேதுவீடு? 'பானை பிடித்தவள் பாக்கிய' மென்று நான் வந்தபிறகு தான் வீடும் மாடும் மற்றை வளங்களும் பெருகின. எனக்குத்தான் இல்லாள் எனவும் மனைவியெனவும் பேர். நீதான் ஓடிப்போ" என்று அஞ்சாது எதிர்மொழியக்கேட்ட அந்தணன் யாதுஞ்செய்ய வல்லனல்லனாய், "ஏ! கருணாநிதே! என்னைக் கொண்டுபோகாயோ!" என்றிரங்கி வருந்தியுரைக்க, அவ்வடங்காப்பிடாரி "நீபோனால் சனிதொலைந்தது" என்று வேங்கைபோல் எரியெழ விழித்துக் கணவனென் றெண்ணாமல் அவனை யிழித்துரைத்தாள். இப்படிப்பட்ட பெண்களைப் பற்றியன்றோ "பேய் கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதே" என்று கூறினர். இவ்வாறின்றிக் கொழுநனைப்போற்றி அவனிடத்துப் பக்தியும், கற்புநிலை தவறுமையும், வாய்மையுடைமையும் மேற்கொண்டவளே நன்மனைவியாவள் என்று சொல்லப்படுகின்றது.

சிநேகன் இலக்கணமாவது, தன்னோடு தோழமை கொண்டவனிடத்துச் சம்பத்திலும் விபத்திலும் ஒருபடிப் பட்டிருத்தல். "கெடு மிடத்துக் கைவிடுவார் நட்புத்" தீதாம். நட்புசெய்தற் குரியாரை முன்னரே நன்காராய்ந்து பின்னர்ச்செய்தல் தகுதி. "நல்லிணக்க மல்ல தல்லற்படுத்து" மென்றீபடி கல்வி கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்த நல்லோரோடு நட்புக்கொள்ளல் பான்மையே யன்றி இங்ஙனமல்லாத புல்லரோடு சிநேகஞ் செய்யிற் பொல்லாத துன்பங்கட்குள்ளாகிக் கிலேசப்பட்டு நாசப்படுவ ரென்பதற்கு இலேசமு மையமில்லை. குளவியானது எழுவகைத் தோற்றத்தினும் இழிந்த பிறவியினையுடைய புழுவைத் தன்னுருவி னமைப்பது போலப் பெரியோர் தம்மை யடைந்தவர் தாழ்ந்தவரேனும் செம்மையினவர்க்குச் சிந்தையுவந்து கல்வியதனைக் கசடற வளித்துப் பேதைமைநீக்கி மேதையுண்டாக்கி இழுக்கெலா மிரிய ஒழுக்கம் புரியப் பயிற்றித் தமைப்போல் சீர்மைபெறச் செய்வர். இருவரும் "பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுவது" போலச் சிறப்புறுவர். பால் தன்னொடு சேர்ந்தநீரை மனிதர் பிரிக்கக்கருதி நெருப்பிற் காய்ச்ச நீர் சுண்டினவாறே தன்தோழன் பொன்றினமை கண்டு பொறாமை கொண்டு "பசைந்தாரிற் றீர்தலிற்றீப் புகுதனன்று" என்பதை யுன்னியேபோலும் பொங்கித் தீயில்விழுகின்றது. இப்படிப் பொங்கிய பாலை யடக்கச் சிறிது நீரைத் தெளித்தவுடனே "நமது

இன்னுயிர்த்தோழன் எழுந்தன" னென்று அது தன்னிலையி லடங்குகின்ற தன்றே? இவ்விதமாய்ப் பாலும் நீரும்போலச் சிநேகர் மனமொழிமெய்க ளில் ஒத்திருக்கவேண்டும். அல்லாமலும் உடையிழந்த ஒருவனுக்குக் கை அவன்மனத்தினும் முந்தி உதவுதல்போல நண்பனுக்குநேர்ந்த இடுக்கணைத் தான் முந்தியறிந்துகளையவேண்டும். தான்மே னிலையடைந்து தனது சிநே கன் கீழ்நிலையி லிருப்பினும் அவனை மறக்கவொண்ணாது. பாலியசிநேகராய்ப் பள்ளியிற்பழகி ஒற்றுமைப்பட்டிருந்த இருவரில் ஒருவன் புண்ணியவசத்தால் பெருஞ்செல்வமும் பேரதிகாரமும் பெற்று வாழ்ந்துவருங்காலத்தில் அவ னைப்பார்க்க விரும்பி அவனுடைய பூர்வசிநேகன் அவனிடம் சென்றபோது அவன் செல்வத்தால் மதித்து இவனைத்தனது நண்பனென்றும மதிக்காமல் "நீ யார்?" என்று இறுமாப்பொடு கேட்க, இவன் "யான் நினது பழைய நண்பன்; நினக்குக் கண்களிரண்டும் அவிந்துபோய்விட்டன வெனக் கேள் வியுற்று உன்னைத் துக்கம் விசாரிக்கவந்தேன்" என்று அவன் நாணி முகங் கவிழ்ந்து மனம்வருந்த உரைத்தான்; ஆதலால் பொருட்செருக்கும் பொச் சாப்பும் இன்றிப் பூர்வஸ்திதியை நினைந்து நட்புப்பாராட்டுவோனே உத்தம மித்திரனாவன். எனவே புத்திர மித்திரகளத்திரங்கள் ஒருவனுக்கு நன்கமை வது புண்ணியத்தின்பாலதேயாம். சத்புருஷர் தமது பணிவால் உயர்வடை கின்றனர். பிறருடைய சிறுமை புறங்காத்துச் சீரெல்லாம் தூற்றுதலால் தம் நற்குணத்தை விளங்கச்செய்கின்றனர். பிறர்பொருட்டுப் பெருமுயற்சிகொ ண்டு உழைத்தலால் தமக்கு வேண்டியபொருளைப் பெறுகின்றனர். இழி யோர் தம்மைச் சிற்றத்தாற் கூறும் கொடியமாற்றங்களைப் பொறுத்தலால் அன்னோரைத் துயர்ப்படுத்துகின்றனர். இவ்வாறு வியக்கத்தக்க நற்குண நற்செய்கைகளையே அணிகலனாக்கொண்ட மேலோர் எவர்க்குத்தான் பூஜ்ய ரல்லர்? எங்கும் கைதொழுது பூஜிக்கக் கனம்பெறுவாரன்றே?

இதனை அடியில்வரும் சிறுகதையா லறியலாம்:—இரவிகுலத் துதித்த இராகவன் தாய்சொல்லைத் தாங்கித் தரணிதுறந்து தன்காதலியோடு கான கம் புகுந்து தவமுனிவர் துயர்களைபத் தண்டகவன முதலிய இடங்களில் வதிந்து பஞ்சவடியிற் றங்குழி, சூர்ப்பனகையின் தூண்டுதலால் இராவ ணன் தன் மாமனான மாரீசனை மாயமானாக ஏவ, அவனும் அவ்வாறே பொன் மானுருக்கொண்டு பஞ்சவடி புகுந்து தனது தோற்றத்தால் ஜானகி தன் மனத்தைக்கவர அவரும் அதனைத் தனக்குப் பிடித்தளிக்குமாறு ஐயனை அதன் பின் ஏவ, அவனும் அம்மானினைத் தொடர்ந்து பற்ற முயன்றும் அது கையுறாமையின் கணை துரந்து வீழ்த்தலும் பொய்ம்மானுருக்கொண்ட அப் புல்லிய அரக்கனும் ஜானகியின் பேரையும் இலக்குவன் பேரையும் இராமன் குரலாற்கூவி இறக்க, அக்குரல்கேட்ட ஏழை, இலக்குவன் விலக்கியுங் கே ளாது அவனை அண்ணல்பால் விடுத்தனள். அவ்வற்றம் நோக்கி யரக்கர் கோன் துறவி யுருக்கொண்டு இறைவிபாற் சென்று தீமொழி பல கூறி, ஓம

குண்டலத்தி னவியை நாய்கவர்ந்து செல்வதேபோல் தேவியை நிலத்தொடு பெயர்த்து இரதத்தினேற்றிச் செல்லாநிற்கச் சடாயு எதிர்த்து அவனோடு இளைக்காது போரிபற்றி இறுதியிற் சிவனளித்த வாளால் எறியுண்டு வீழ்ந்தனர். பின்னர் இராமன் காதலியைக் காணாது தேடியலைபவர் அக்கழுகரசனைக் கண்ணுற்று அவரால் நிகழ்ந்தன யாவுமறிந்து அவருடைய ஞானபக்தி சீர்மைக்குவியந்து அவர்க்குத் தீக்கடனும் நீர்க்கடனும் செய்து "சிறுகாலையிலா நிலையோதிரியா - குறுகா நெடுகாகுணம் வேறுபடா - உறுகால் கிளர் பூதமெலா முகினும் - மறுகா நெறி" யாகிய வைகுந்தமளித்துச் சென்றனன். எனவே, அறிவொழுக்கமமைந்த மேலோரை அனைவரும் போற்றி பொழுகுவர் என்பது இதனால் விளங்குவ தன்றியும், குகன், விபீஷணன், துருவன், பிரகலாதன் முதலோரது திவ்விய சரித்திரங்களாலும் நன்கறியலாகும்.

கே. எஸ். கோபாலாச்சாரியார்.

---

## மைசூரரசு.

---

### ச—வது முடிபுனைந்த சருக்கம்.

அவ்வணஞ் சிலபகல் சென்றபின் சோதிட நூலோர் ராய்ந்துரைத்ததோர் நல்லோரையில், அரசிமருமகளைச் சிங்காதனத்திருத்தி மணிமுடிபுனைந்து, "ஐயனே! என் கண்மணியொக்கும் பெண்மணியைப்போல் இம்மண் முழுமையுமுனது வரைப்புபத்தாலாளுக" வென வழங்கி, அதற்கொத்த கணையாழியையும் அவள் விரலிலணிந்து வாழ்த்தினாள். அங்ஙனம் பார்ப்பனிகளாகிய சுமங்கலிகள் பலர்சோபனம் பாடவும் மேளகர்ச்சனை யென்னப் பலவித மேளங்கள் முழங்கவும், இருடிகளும் மனஞ்சலிக்கத்தக்க அழகியர் நடிக்கவும், இன்னு மித்தகைய பலவாடம்பரத்தோடு அவன் மகுடம் புனைந்துகொண்டனன்,

அத்தருணத்தில் அறிவிலும் வயதிலும் முதிர்ந்தோர் சிலரெழுந்து அரசனே! நின் பவளவாய்ச்சியான பட்டத்துத்தேவியையே மணந்து, இருமையிலுங் சைப்பதற்கிடமாகிய அயல்மாதர் கண்வலையிற் படாமல் ஆமைபோல் ஐந்துமடங்கி அரசாண்டொழுகக்கடவை யென்று ஆசீர்வதித்தனர். இவர்கள் இப்படி வாழ்த்த வெல்லோரும் களிக்குமாறு அவரவர்க்கேற்றபடி பரிசளித்துக், கல்வியினுங் கருத்தினுஞ் சிறந்த தேர்ச்சித் துணைவருடனாராய்ந்து புரந்து தனது மலர்க்குழலாகிய மாதரசியோடு மகிழ்ந்து களித்திருந்தனன்,

இவ்வாறு நிகழ்கையில் அவன் மாமியது தாயதியாகிய சாந்தராய
னென்னு மொரு துடுக்கனிழைத்த சில பிழைகளைக்கண்டு, அவனை யதிகாரத்
தினின்று மகற்றி, அவன் புரந்துவந்த புரத்தைத் தனது இளைஞனான கிருட்
டினனுக்குப் பட்டங்கட்டினன்.

பெருமகனிப்படி பெருமிதத்துடன் ஒழுகும்போழ்தில் ஒருநாள் அவ
னது அருமைநாயகியாகிய தேவாசம்மணி யருகிலணைந்து, மலர்க்கரங்குவி
த்து முல்லைமுகைபொத்த பல்வரிசை யிளநிலவை வீசக் கிளியென்வாய்திற
ந்து கிழ்வருமாறு கிளக்கலாயினள்: "எனதுயிர்க்கிறைவரே! மாயையின்
கருணையால் யாமிருவருங் கூடிவாழும் இவ்வரியபேறு நமக்குண்டானதால்
அவனுவக்குமாறு ஒன்றுரைக்கின்றேன். அது அவன்மனத்திற் கிசைந்தது
மன்றி யிக்கடல் சூழ்ந்த காசினியிலு மது திறத்திற்கும் தக்கது. உதவிகுன்
றுமைக்கு முரியதாம். அஃதென்னெனின் அந்நீலியினருளாலே நம்மிருவரை
யு மிணைப்பதற்குப் புருடகாரமாகிய விலிங்கிக்கும், அந்தணராகிய வமைச்ச
ரிருவர்க்கும் புரியத்தக்க வொரு நன்மையே" யென்னக்கேட்ட புரவலன்
குறுமுறுவல் செய்து, அதை இன்னதென விளக்குக வென்ன மற்றுந் தெரி
க்கின்றனள். "இனி நமது மரபிற் பிறந்து இப்புவியை யாளும் புரவலர்
கள் இவ்விலிங்கியின் பெயராகிய உடையார் என்பதைத் தாங்களுந் தரி
த்து அவனது உடையாகிய காவிச் சீலையைக் கோடியிற் பிணிப்பதுமன்றி,
அவ்வேதிய ரிருவோரது குலத்தின்கண் உதிப்பவர்க்கே யமைச்சத் தொ
ழிலை யளிக்கவேண்டு" மென்றி வேண்டிக் கொண்டனள். அதற்கவன் அக
மகிழ்ந்து பாலை வென்ற பணிமொழியும், வேலைவென்ற விழியினையும்,
நூலைவென்ற நுண்ணிடையும் படைத்த பைங்கிளியே! இங்ஙனம் நீவேண்
டியவை யெல்லாம் தடையின்றி யடைகவென வுரைத்தனன். அவ்வாறவ்விரு
வரும் ஆவியொன்று உடலிரண் டென்னுமாறு பல்லாண்டு மகிழ்ந் துறைகை
யில், அப்புறம் அவனியை யளிக்கப்புதல்வ னில்லாமையை நினைந்துறைந்து,
எண்டோளியை யிதயத்தி லிருத்தி நோற்ற நோன்பினை அத்தேவிகண்டு
களித்துச் சூரர்களாகிய சுதர்களிருவர் தோன்றுமாறு வரந்தந்தனள். அவ்
வரத்தினாலுடனே மன்னன் மனைவி கருவுற்றுத் தக்கபருவத்தில் முத்தை
யுயிர்க்குஞ் சங்குபோ லிரண்டு செல்வரைப் பெற்றெடுத்தனள். புரவலன்
அப்புதல்வர்கட்கு முறையே பெரியமலைச் சாமராஜ வுடைய ரென்றும்,
சாமராஜவுடைய ரென்றும் நாமகரணம் புரிய வக்குமார் கறுங்களபமென்ன
நாளொருமேனியும் பொழுதொரு வர்ணமுமாய் வளர்ந்து வந்தனர்.

பின்னர், அத் தம்பதிகளிருவரும் பதுமையின் கோயிலை யடைந்து
அதற்கெதிராகச் செழித்தோங்கும் செண்பகத்தருவில் மணிகளிழைத்த
பொற்றொட்டி லொன்றைத் தொங்கக் கட்டி, அங்கிருந்து நஞ்சனங் கூட்
டிற் கெழுந்து அங்கு விண்டு பதியும் இளந்திங்களும் பொருந்திய சடாத

ரனை வணங்கித்துதித்து, மற்றும் அவ்விடத்திருந்துபோந்து கதிரவ னுலாய்ந்து செல்கின்ற கொடிமுடிகளுள்ள யாதவகிரி மீதிவர்ந்தனர். அவ்வா றிவர்ந்தவர், முற்றிலுந் தாமரைக்காடு பூத்து, இடையிலோர் கொடி மின்னலு மின்னப் பெற்ற கருமுகி லொன்று காணப்படுவதுபோல் திருவுரத்தில் வீற்றிருக்கும். திருமகளோடு திகழ்கின்ற திருநாராயணனது பெருங்கோயி லுட்புகுந்து, அளவிடற் கரிய வண்ட கோடிகள் முளைத்தற் கேற்ற மூலதாமரையுந்தியனாகிய அவ்வெம்பெருமானடித் தாமரைகளைத் தொழுது துதித்து, மற்றுந் திருநாராயண புரமென்னும் அவ்வழகிய நகரைச்சூழ ஆகாயமளாவத்தக்கதோர் பொன்னெயி லிழைத்து, அதனது நாற்புறத்திலும் திவாகரனு நுழைந்து செல்லற் கொத்த நான்கு கோபுரமும் கட்டுவித்து அதற்கு **மேலக்கோட்டை** யென்னுந் திருநாமமுமமைத்து மீண்டு தமது வளநகரை யடைந்தனர்.

ஸ்ரீநிவாசாசாரியர்.

---

## மல்லிகை மாதவர். *

---

அல்லியின்முகைகளதிமணம்வீசியவிழ்தலுமந்தரமதனின்
மெல்லியமேககணங்களுமேவிமேதினியனைத்தையுநோக்க
வெல்லிவந்தடுத்தென்றனைவோருமிருப்பிடனுடிடும்வேளை
மல்லிகைதனக்கோர்மானிளங்கன்றையளித்தனன்மாதவனென்போன். (1)

அளித்தலுமவர்தமளவிலாக்காதலனைத்தையுமன்புபாராட்டிக்
களித்தினிதிருக்துங்கடுகியகாலைக்கதிரவனுதித்தலுநதமக்குத்
துளித்திடுநறுந்தேன் றூமலர்மாலைசூட்டிடுங்காலமாமென்ன
விளித்தினிதுரைத்துவேந்தனன்மகளைவிடுத்தனன்மாதவன்மன்னோ. (2)

மாதவனுங்குவிடைகொடுமேவமல்லிகைமனத்திடைநினைப்பா
ணீதிமன்னவன்றன்மகளெனுநீண்டபுகழிற்குநிதிக்குவைதனக்கும் .
பூதலமாளும்பெரும்புகழதற்கும்பூண்டிடாதன்பெனதுண்மைக்
காதலையறிந்துந்தகுதியைநினைந்துங்கருதினன்மணமவனெனவே. (3)

இத்தகைநினைந்தங்கிருந்திடுமெல்லையிவளருஞ்செவிலிசென்றடைந்தே
யுத்தமனுன்றனிடமிருந்தகன்றவுவனெவனென்றலுமென்ற
னத்தைபாரீன்றவண்ணல்காணவனேயடியெனையன்புடனுளைச்
சித்தமாய்மணந்துசீர்பெறச்செய்துசிந்தையாகுலந்தவிர்ப்பவனே. (4)

என்றனள்செவிலியீசனதருளீங்கிருந்தவாறென்னெனவியந்து
நின்றனணீதிநிகழ்ந்ததைநாடிநிமலனதருடனைப்போற்றி
யின்றுனதரசுமிப்பெரும்புவியுமினிமையார்ந்திலங்குபல்வளமு
முன்றனக்குரிமையுடையனவல்லவுரியவனுனதுமாதவனே. (5)

---

* Adapted from Tennyson's 'Lady Clare' with slight modifications,

செவிலியன்றுரைத்தவாசகங்கேட்டுச்சேலுறழ்கண்ணியும்பதறி
நவின்றநும்மாற்றங்கனவிலோவன்றிநனவிலோநாடுதியன்னாய்
தவிருறுமொழியின்றன்மையையெனக்குத்தருவையென்றிரத்தலுஞ்செவிலி
புவிமிசையீசனிருத்தல்போற்றிண்ணம்பூவைநீயென்மகளெனவே. (6)

இறந்ததநம்மரசன்மகளுமென்மார்பிலிறந்திடவவளைநான்மறைத்துச்
சிறியவென்குழந்தைமாய்ந்ததென்றுரைத்துச்சீருடன்புதைத்துவிட்டுடனே
வறியவென்மகளைமன்மகளென்றுவழங்கியேவளர்த்துநான்வந்தே
னறிதியிவ்விடயமரியவென்மகளேயனைத்துமேயறியநான்சொன்னேன். (7)

வேறு.

மெய்யெனிலுரைத்தமாற்றமேதினிகவரவேண்டிப்
பொய்யினைப்புகன்றுநீயும்பூதலத்திடையுலாவு
மையனைப்புருடர்தங்கட்கரசனையவனதான
வையகமனைத்துநீங்கிவாழியசெய்தாய்பாவி. (8)

வெளிப்படவொண்ணாதிந்தவிடயமதின்றுநீயு
மொளித்திடல்வேண்டும்வேறுமோதலையுறுதியாகக்
களிப்புறநீங்கள்நாளைக்கணவன்காதலியுமாகி
னளிக்குமன்னவனானிற்குப்பொருளெனச்செவிலிசொன்னாள். (9)

பிறவியாற்பிச்சையேற்கும்பேதையேனாகுங்காலை
யிறைவியானென்றுகூறியில்லனபுகறலென்னே
மறைகவென்பொன்னங்காப்பும்வயிரவட்டிகையுமின்னே
தறையிடுகாக்கைச்சன்னந்தனதுடற்பகட்டுமென்கொல் ? (10)

அன்றருங்குழந்தாய்நீயுமனைத்தையுங்கரத்தல்வேண்டு
மென்றலுமரசிகூறுமெனதுளம்பொறுக்கலாற்றா
தின்றவனிடத்துநானுமியம்பியாடவர்தமுண்மை
நின்றவாறென்மேனேயமுள்ளவாறறிவெனென்றாள். (11)

என்னைகொனேயமாவதெனதருமணியேயின்று
சொன்னவுன்னுடைமைகட்குச்சுதந்தரநாட்டிநிற்பா
னென்னவவ்வரசிகூறுமெனதுயிர்நீப்பனேனும்
மன்னனென்காதற்காளைவளங்களையின்னேயீவென். (12)

ஐயகோமகளேயுன்பாலன்பினாலீடுபட்டுப்
பொய்யதும்புதன்றவுன்றன்பேதையேற்கொருமுத்தீவாய்
கையளையின்றுகாத்தசற்பகமனையாயானு
முய்யுமாறுற்றசெய்கையுவக்குமாறிருந்ததென்றாள். (13)

அன்னைநீயுரைத்தமாற்றமனைத்துமேயுண்மையாயி
னென்னையீன்றெடுத்ததாயர்க்கினியதோர்முத்தமீந்தேன்

பின்னையென்றலைமீதுன்றன்பெருமைசார்கரங்கள்வைத்து
முன்னமேபோவதற்குமுடிவிலாவாசிசொல்லாய். (14)

வேறு.

அரசியர்க்குரியதோராடைநீத்துடன்
திருவறுவாழ்க்கையர்சிறுமைபூண்டுபின்
பருமலைச்சாரலிற்பள்ளத்தாக்கிற்கான்
வருகுழலிடையொருமலர்கொடேகினாள். (15)

தையலுந்தனிவழிதாளினேகலு
மொய்யெனப்பின்றொடர்ந்தோடிக்கன்னியின்
கையிடைத்தலையுறக்கருதிக்காதலிற்
செய்யமாதவன்றருமானுஞ்சென்றதே. (16)

மாதவன்றனதரண்மாடநின்றிழிந்
தேதமில்லழகினையிகழ்ந்தமல்லிகாய் !
பூதலத்திடையுயர்பூவனாயிவ
ணேதுமில்லேழைபோலெய்தலென்னையோ ? (17)

ஏனழபோலுடையுடுத்தியங்கக்கண்டிரே
லூழையேதொடர்ந்தனெனென்றுட்கொள்ளுவிர்
தாழவில்லிரந்துணப்பிறந்ததையல்யான்
வாழவோவரசொடும்வசையொன்றின்றியே. (18)

தந்திரமெனதிடையியற்றருங்கலேன்
சுந்தரமாயவென்சொல்லுஞ்செய்கையு
நந்துநின்செல்வமாநல்லியுய்க்குவேன்
மந்திரமனையவுன்மருமங்காண்கிலேன். (19)

என்றவனுரைத்தலுமிவளுமேறட்டு
நின்றவனிணைவிழிநிமிர்ந்துநோக்கித்த
னொன்றியசெவியினுரையனைத்தையும்
பின்றலின்மனத்தொடும்பேசினாளரோ. (20)

நட்டவனெள்ளுபுநகைசெய்தங்கவன்
கிட்டவந்தவடனைச்சிறுமுத்திட்டுடன்
பட்டமாளுரிமையுன்பரமதில்லையே
லொட்டியவுறவினேனுசிதமாகவே. (21)

பட்டமாளுரிமையுன்பரமதில்லையே
லொட்டியவுறவினேனுசிதமாகவே
நட்டநாமிருவருநாளைக்காலையே
சட்டமாய்மணந்திடச்சகலவாழ்வொடும். (22)

என்னவேயெனுமென துரிமையாவையு
மின்னவேயாகுநின் னுரிமைபோகுமோ
பின்னவையனைத்தையும்பேருக்காளுமென்
றன்னையேயாளுநடலைவியல்லளோ ? (23)

இவ்வகையுரைத்தலுமிருவர்தாமுமாங்
கவ்வயினொருவரையொருவரன்புடன்
கௌவியமனத்தராய்க்கரங்கடாங்கொடு
வெளவியேயவர்பரவசர்களாயினர். (24)

உலகினரியல்பினையுற்றுநோக்கியே
யலகிலாவன்பினையாளும்பான்மைதாங்
குலமன்றுகுணமுயர்குறிப்புங்குன்றிடா
நலனுறுமுறுதியுநண்புமென்றனர். (25)

பி. ஏ. பிரணதார்த்திஹரசிவன்.

## பெண்கல்விக்கும்மி.

1. மாமதி யொத்த முகமுடை யீரிள
மாங்குயி லொத்த குரலுடையீர்
மாமயி லொத்துள மெய்யுடை யீரினும்
மாரதி நாணும் வனப்புடையீர்.

2. வேலைப் பழித்த விழியுடை யீரிள
வேயைப் பழித்தமென் றோளுடையீர்
வேளை வருத்திடும் மென்னுத லீர்வாரும்
வேடிக்கை யாய்க்கும்மிப் பாட்டுரைக்க.

3. ஆதியி லீசன் படைத்தெது மேநம்மை
ஆடவர் தங்கட் குறுதுணையாய்
மேதினி தன்னில் விடுவித் திடமிக
மேன்மை யுடன்நாமும் வாழ்ந்திருந்தோம்.

4. சின்னஞ் சிறுவய திற்சதங் கைபூண்டு
சிறிதேனுஞ் சிந்தனை யில்லாதே
அன்னை முதற்பல பேருங் களிக்கவே
ஆண்டுமோ ரைந்து கழித்துவந்தோம்.

5. பன்ன லரிய பலவித நூல்களும்
பக்குவ மாகப் படித்தபின்பு
கன்னிப் பருவங் கழித்துத் தகுந்ததோர்
கல்யாணஞ் செய்து களித்திருந்தோம்.

6. நாயகர் தங்கட் குயிரென்ன வேநாமும்
நாடுந் தழைக்க நடந்துவந்து
நாதன் கருணை நயத்தா லனைவரும்
நன்மக்கட் பெற்று நலமடைந்தோம்.

7. மக்களைப் பெற்று வளர்த்தெடுத் துப்பின்னும்
மந்திரி யாகி மணாளர்கட்குத்
தக்க மதியை யுரைத்து மவருறுந்
தாபந் தனையுமே தாங்கிநின்றோம்.

8. உண்டபின் னுண்டு முறங்கிய பின்னே
யுறங்கி யிருந்துமுன் னுமெழுந்து
கண்ட பொழுது களித்து மவர்தமைக்
காணாத போழ்து கலங்கியுமே.

9. உண்பது மின்றி யுறக்கமு மின்றியே
உற்ற வுடையும் புதியதின்றிக்
கண்பனி பெய்து கதறித் தவித்துப்பின்
கண்டதும் நாமுங் களிப்படைந்தோம்.

10. செல்வ மிருக்கிற் சிறப்படைந் தேபின்னுஞ்
சிந்தனை செய்யிற் றுயரடைந்தும்
நல்வழி தீவழி யெவ்வழிப் போயினும்
நாதரு டனே நயந்திருந்தோம்.

11. புத்தெனும் பாழு நரகி லிருந்து
புருஷர்கள் தப்பிப் பிழைக்கும்வணம்
புத்திரர்ப் பெற்றுப் புகழ்பெற வேநாமும்
பூர்வீக வம்சந் தழைக்கச்செய்தோம்.

12. மாதமோர் பத்துஞ் சுமந்தரித் தேதின
மாதேவன் றன்னை மனத்தில்வைத்து
வேதனை யாவும் வகித்துக் குழந்தைகள்
வேண்டிய வாறுபெற் றேவளர்த்தோம்.

13. இல்லற மல்லது நல்லற மன்றெனு
மின்றமிழ்த் தொல்லுரைக் கேற்றபடி
எல்லா விதநன்மை தீமை யனைத்தையும்
ஏகமாய் நின்றுநா மேற்றுவந்தோம்.

14. இத்தகை யாகிய வுத்தமிப் பெண்க
ளிருந்தமை யுண்மை யெனப்புகல
அத்தம யந்தி யருந்ததி சீதையும்
ஆனவோர் சாவித் திரியமையும்.

15. சொன்னதோர் சொல்லிற் கிரண்டுரையாமையிற்
சோர்வின்றி வாழ்ந்த வரிச்சந்த்ரன்
தன்னுடைத் தேவி யுடன்றனும் பாஞ்சாலி
தக்கபெண் ணாயக மெத்தனையோ.

16. பெண்க ளிருந்த பெருந்தன்மை யாலேயே
பேறு பெறுவதற் கேதுவாய
விண்ணுள தேவர் முனிவர்தங் கட்கிடும்
வேள்வியில் நாமே சிறந்திருந்தோம்.

17. நாமிருந் திட்ட நயத்தை யறிந்தநம்
நாயகர் நம்மைச் சிறப்பித்திட
நாமன்றி வேள்வி சடங்கு விருந்துகள்
நாடிடி லூதிய மில்லையென்றார்.

18. கற்புடை மங்கைதனைக்கொண்ட வாடவர்
காதலிக் குந்தன்மை யீதெனவே
சற்புரு ஷர்பிர மன்முதன் மூவரும்
சற்றும் பிரியா தெடுத்துநின்றார்.

19. தங்கள் மதியிலும் பெண்கள் மதிமிகத்
தாழ்ந்ததென் றெண்ணந் தலையெடுத்தோ
மங்குங்கா லந்தங் களுக்கு நெருங்கிடில்
மாதர்கள் முந்துவா ரென்றெண்ணியோ.

20. இத்தனை நாளும் படித்த படிப்பை
இகழச்செய் தேநம்மை யேய்த்துவிட்டு
புத்திகெட் டார்கள்பெண் கள்ளென்றும் நந்தமைப்
பேயென்றும் பேசிப் புறக்கணித்தார்.

21. கல்விநம் மைவிட் டகலவு மேயவர்
கண்ட படியெல்லா மேசலுற்றார்
செல்வ மிழந்திட்ட சிற்றர சர்போலக்
சீவனஞ் செய்து பிழைக்கலுற்றோம்.

22. ஆலால மாவிடம் போல்வரென் றுந்நம்மை
யாகாத வஞ்சகர் தாமெனவுஞ்
சீல முடையார் பிணியென்று மேநம்மைச்
சீர்கெட வேமிகப் பேசலுற்றார்.

23. மாதர்த முண்மணம் மாறு படாமலே
மாதவத் தாட்டியர் தாமிருக்க
காத விடையிற் கடைப்படுத் திட்டவர்
கர்மத்தை நாமே கலைத்தோமென்பார்.

24. இந்த விதமா யிகழ்ந்துமே நம்மை
யினித்தலை தூக்கிக் கிளம்பவொட்டார்
பந்தம் பலவு மியற்றி யடிமையாய்ப்
பாரி லிருக்க விடுத்தனரே.

25. நம்ம சிறுமிகள் நாளுமே வாழ்ந்திட
நாதர் வரித்து மணம்முடிக்கத்
தம்மனத் தெண்ணப் படிநட வாமலே
தக்க வயதின்றித் தானஞ்செய்தார்.

26. இந்த விதமா யிளமைப் பிராயத்தில்
இல்லற வாழ்க்கைத் துணைகொளலால்
அந்த மிலாவிடை யூறு லநேகர்கள்
ஆதர வின்றி யலறுகின்றார்.

27. இத்துணை நம்மை யினிது விடாமலே
இன்னுங் கெடுக்கக் கொடிகட்டியே
எத்தனை ரூபா யெனக்குக் கொடுக்கின்றாய்
யென்கிறார் பெண்கள் தமைமணக்க.

28. என்ன பணத்தைக் கொடுத்தாலு மேயதை
ஏளனஞ் செய்து மெடுத்துக்கொண்டு
கன்னி படித்தவள் தானோ புகலுமின்
கல்வி யழகே யழகென்பரே.

29. இன்னும் சிலபுரு ஷர்கள் படித்தவர்
என்றொரு பேரை யெழுதிக்கொண்டு
என்ன விதம்பெண் ணழகில்லை யாயினும்
என்னுடை தேவை மணமென்கிறார்.

30. கருணை சிறிதும் மனதிலி லாமலே
கைந்நிறை யப்பணம் வேண்டுமென்பார்
மருவிய பெண்டிர் மறிக்க விரும்பிப்பின்
மாமணஞ் செய்வதற் கையமுண்டோ ?.

31. இத்தகை யாகிய துன்பத் திடைப்பட்டே
ஏங்கித் தவிக்கின்ற வேழைபலர்
சித்தங் கலங்கிப் புழுங்கிச் சிறுமிகள்
சீசீ நமக்கினிக் கூடாதென்பர்.

32. ஐயவுன் பத்தினி பெற்றெடுத் துள்ளது
ஆண்மக வோபெண் மகவோவெனக்
கையைப் பிசைந்துபெண் ணென்றலு மேயவர்
கன்னி பெறுதல் கடையென்பரே.

33. புத்தியி லும்யுத்தி தன்னிலும்பெண்கள்
புருஷர் தமக்குப்பின் னிட்டவரோ
எத்தகை யாகிய வாழ்க்கைச் சுகத்திலும்
எங்குள ராடவர் நாமன்றியே ?

34. பிள்ளை வளர்த்தல் பிறர்பிணி தீர்த்தல்பின்
பிச்சை யிரப்போர்க் கிரங்குதலும்
உள்ள பொழுது முழைத்துக் களைத்தவற்
குற்சாகஞ் செய்திடல் வேண்டியுமே.

35. மெல்லிய தேகம் நமக்களித் திட்டவிம்
மேன்மை சிறிது முணராமல்
வல்லமை தங்கட்குத் தானுள தென்றுமே
வஞ்சனை செய்து வளங்குறைத்தார்.

36. மானிலந் தன்னில் மனிதர் புரிந்திடும்
மாக்கட மைகள் பலவற்றினுள்
சூனிய ரென்று சொலப்படும் மாதர்கள்
சோர்வின்றிச் செய்திட லெத்துணையோ.

37. இல்லற மென்னு மிருட்கடல் தன்னில்
இலங்கும் மரக்கல மொத்துளநம்
நல்ல தனம்பின் கலங்கவிழ் மாலும்
நாடுங் கதிநாடிற் காணுவரே.

38. வீணி லிவர்களை நோவதி லும்நம்
வினைப்பயன் றன்னையே நொந்துகெண்டு
காணிலிந் தப்பல துன்பங் களுக்குமே
காரணம் நாமன்றி வேறிலையே.

39. இத்தனை நாளும் மிடியுண்டு மற்றும்
மிடுக்க ணடைந்தது மேனெனில்நாம்
பத்தி யுடனே படித்த படிப்பைப்
படியாமல் வீணே விடுத்ததுதான்.

40. இந்த விதம்பல துன்ப மடைகின்ற
இந்திய மாத ரினிச்சுகிக்கச்
செந்தமி ழேனுஞ் சிறக்கச் சிறுமிகள்
சீருடன் கற்கச் செயம்பெறுவோம்.

41. கல்வித் தலைவி கலைமக ளென்பவள்
காரிகை யன்றிப்பின் ஆணிலைநம்
செல்விகள் கற்கச் சிறக்க மணந்துமே
சீரடை வார்சிவ காமிசொன்னேன்.

சிவகாமி.

# தமிழ்க்கவி சரிதம்.

இன்னுஞ் சிலர் கி. பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்தன னென்பார். பாணனது காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி யென்று நிலை நிறுத்தப் பட்டுளது. கி. பி. ஆறாம் நூற்றாண்டும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் முறையே தண்டி பவபூதிகளினது காலங்களெனக் குறிக்கப்பட்டுள. பாரவி மாகன் காலத்திற்கு முன்னரே வாழ்ந்திருத்தல் வேண்டுமென்பது காணப் படுகின்றது. இவ்வாறே முற்பகுதிகளில் யாம் சீத்தலைச் சாத்தனாரும் மருத்துவன் றாமோதரனாரும் கரிகால கபவாகுகளினது காலத்தில் அஃதாவது கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தனர் எனவும் நக்கீர கபில பரணர்கள் வமிசசேகர பாண்டியன் காலத்தும் அவன் மகன் வமிச சூடாமணி காலத்தும் வாழ்ந்திருந்தன ரெனவும் இடைக்காடர் பாண்டிய குலேசனது காலத்தும் அவன் மகன் அரிமர்த்தனனது காலத்தும் வாழ்ந்திருந்தன ரெனவும் காட்டியிருக்கின்றாம். இவ்வாறு வெவ்வேறு காலங்களில் வாழ்ந்திருந்த விப்புலவர்கள் ஒருங்கு கூட்டப்பட்டுத் தமக்கு முன்னேயாதல் பின்னேயாதல் பிறந்து விளங்கிய அரசர்களது காலத்தில் இருந்தவராக்கப் படுகின்றனர்.

இவ்வாறு பாவலர் சங்க மீரீஇயினான் போசராச னொருவனே யன்றியாம் விக்கிரமசாகை யெனச்சகாப்தம் கணக்கிடேஉம் விக்கிரமாதித்தியராசனும் பிற்கூறப்படும் நவரத்தின மணிப் பெயர் பெற்ற மகான்களை யாதரித்தனன் எனவுங் கூறுப:—தன்வந்திரி, க்ஷபணகன், அமரசிம்மன், சங்கு, வேதாளபட்டன், கடகற்பரன். காளிதாஸன், வராக மிகிரன், வரருசி.

தமிழ்ச்சங்கங்களையும் போசராசனதவைக்களத்தே வாழ்ந்திருந்தன ரெனக் கூறப்படும் வடமொழிப் புலவர் குழாங்களையும் ஒப்பிட்டு யாம் செய்த வாராய்ச்சி தமிழ்ப் புலவர்கள் வடதிசையாளரிடத்திருந்தே சங்கங்களைப்பற்றிய கருத்துக்களை மேற்கொண்டன ரென்றெண்ணுமாறு நம்மைத் தூண்டா நின்றது. எனினும் சங்கத்தைப் பற்றிய வெண்ணம் இன்ன காலத்திலேயே முதன் முதல் தமிழ்ப்புலவரது மனத்தில் உதித்ததென்று வரைந்து சுட்டுதலரிதாகின்றது.

மேற்போந்த தமிழ்ச் சங்கத்திற்குப் பல விடயங்களினும் இணையானதும், அஃது அங்குரித்தற் கேற்ற மூலமெனக் கோடற்குத் தக்கதுமான வேறு சங்கமொன்று எடுத்துக்கூறுகின்றாம். படைத்திட்டுக்கொண்ட சில செய்திகளோடு கூடிக்கிடந்த வம்மூலமே பின்னர் எதையு மெளிதாக நம்பி விடாப்பிடியாக் கொள்ளு மியல்புடைய இந்திய பண்டிதர்களால் அத்தகைய பெரிய தமிழ்ச்சங்கமாக வோங்கி வளர்ந்திருக்கலாம்.

**திகம்பர தரிசன**மென்னு மொரு சைனசமய நூலின்கண் விக்கிரமசகம்
526 - இல், அஃதாவது கி. பி. 470 - ஆம் ஆண்டிற் பூஜ்யபாதர் என்போ
ரது மாணாக்கரு ளொருவராய வச்சிரநந்தியென்பவரால் தென்மதுரையில்
ஒரு திராவிட சங்கங்கூட்டப்பட்ட தென்று கூறப்பட்டுளது. (**மும்பாபுரி
யரசாங்கத்து ஆசியா சங்கபத்திரிகை.** சம்புடம். XVII, புத்தகம் - 44,
௭௬ - ஆம் பக்கம் பார்க்க.) இச்சங்கமானது தெற்கே போந்து தங்கள் சம
யக்கோள்களைத் தாபித்தற் பொருட்டு முயன்று நின்ற திகம்பர சைனர்களது
கூட்டமாயிருந்தது. தமிழினும் வடமொழியினும் வல்லுநராயிருந்த பல
சமயாசாரியர்கள் அதன் அவயவிகளாயிருந்திருத்தல் வேண்டும். மேற்
கூறிய கூட்டத்தின் காலமும் வமிசசேகர பாண்டியன தரசாட்சி விஷய
மாக வில்சன் துரை குறித்தகாலமும் ஏறக்குறைய வொன்றுகின்றன;
அஃதாவது, கி. பி. ஐந்தாவது அல்லது ஆறாவது நூற்றாண்டாம். யாம்
அவரது மக்கன்ஜீ சேகரங்களின் விரித்துரைபட்டியின் 46—47—ஆம்
பக்கங்களினின்றும் ஒரு பகுதியை யெடுத்துரைக்கின்றாம். அது வருமாறு:—

"வரகுண பாண்டியன தரசாட்சிக்குச் சிறிது பின்னர் 24 அல்லது
25 அரசிளங்குமரவரிசை காணப்பட்டுள; அவர்கட்குப் பின்னர் ஒருபுதிய
வமிசத்திற்கு ஆதி கூடஸ்தனாகத் தோன்றும் வமிசசேகர பாண்டியன் அர
சுரிமை பெய்து கின்றனன். மதுரையின்கட் கோட்டையும் அரண்மனையுங்
கட்டினமையும் பழைய நகரத்தினைப் புதுப்பித்தமையு மாகிய விவையிற்றை
யிவ்வரசனே செய்தன னெனக் கூறுதற்கட் பஃறிறப்பட்ட சரிதைகளுமி
ணங்குகின்றன. பலரும் ஐயுறுமாறு நகரைப் புதுப்பித்த லென்பதற்கு
யாம் புதிது உண்டாக்கப் பட்ட தெனப்பொருள் கொள்வெமேல் இவ்வரசி
ளங்குமரன் கிறிஸ்து பிறக்குமுன்ன ரிருந்திருத்தல் வேண்டுமென்பது போ
தரும்; ஆனால் இது வரகுணபாண்டியனுக்கிட்ட காலவளவினோடும் மற்
றைய வரசிளங்குமரர்தங்கால வளவினொடும் முரணுமாறு காண்க. இவ்வ
மிசத்தி னிறுதிக்கட் கூறப்படுங் கூன்பாண்டியனினின்றும் மேலே கணக்கிட்
டுக்கொண்டு செல்வெமேல் வமிசசேகர பாண்டியனைக் கி. பி. ஐந்து அல்
லது ஆறும் நூற்றாண்டில் வைக்குமாறு நேரிடும்."

தட்சிண தேசத்திலுள்ள மதுரையின்கண் திகம்பர சைனர்களா
னேற்படுத்தப் பெற்ற திராவிட சங்கத்தின் காலமும் மூன்றாந் தமிழ்ச்
சங்க மேற்பட்டதாகக் கூறும் காலமு மொன்றா மாற்றினைக் கூர்ந்து
யோசிக்கு மிடத்துப் பின்னர்க் கூறியது ஒரு வேளை திகம்பரசை
னர்களது சமயக்குழாத்தினையே இந்துக்கள் தங்கண் மதக்கோளிற்
சேற்றவாறு மாற்றிச் சொல்லிக் கொண்டனரோ வென்றையுறற் கிட
னுளது; இஃதுண்மையென் றேற்படில் இது மிகவு முக்கியமான விஷயமா
தலையன்றி மதுரையிற் சைனர்கூட்ட மேற்பட்ட காலமே தமிழ்க்கவி
சரிதத்தைப்பற்றி யெழுதுதற்சேற்ற வுறுதியானவாரம்பமாகுமென்க.

இக்கொள்கைக் கநுகூலமாகத் திருக்குறளுஞ் சிலப்பதிகார மணிமேகலைகளும் யாக்கப்பட்டகாலங்களைப்பற்றியாம்முன்னரேயெய்திய முடிவுகளையெடுத்துரைக்கலாம். அவையாவன பிற்கூறிய விருநூல்களும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் செழித்தோங்கிய கரிகாலச்சோழன் முதலாவன் காலத்து யாக்கப்பட்டனவென்பதும், மணிமேகலையினுண் மேற்கோளாகப் பெற்ற திருக்குறள் கி. பி. முதனூற்றாண்டில் யாக்கப்பட்டதென்பதுமேயாம். மூன்றாஞ் சங்கமேற்பட்ட காலத்து அரசாட்சி செய்தவனாகிய வமிசசேகர பாண்டியன் காலத்தினராய நக்கீரர் அச்சங்கத்தின்கண் முதற்புலவராயிருந்திருக்கவேண்டும்: அவர்தாங் கண்டருளிய இறையனாரகப்பொருளுரையிற் சிலப்பதிகாரச் செய்யுட்களிற் சிலவற்றை யெடுத்துக்காட்டுவதனாலே, நக்கீரர் களவியற் பொருள் காண்டற்குச் சிலகால முன்னரே சிலப்பதிகார மியற்றப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விடயமானது முற்பக்கங்களிற் குறிப்பிக்கப்படாது போயினமையின் அது சிலப்பதிகாரமும் அதன்றொடர்ச்சியாகிய மணிமேகலையும் நக்கீரரது இறையனாரகப் பொருளுரைக்கு முற்பட்டனவெனக் காட்டுதல் கருதி யீண்டெடுத்துக் கூறப்பட்டது.

தமிழிலக்கியங்களிற் சமயநூல்கள் மற்றையவற்றினு மிகச்சிறப்புடையவாம்; அன்றியும் அவை வடமொழிச் சமயநூல்களினும் அதிகமாகக் கவனிக்கற்பாலவாம். வேதங்களும் மிருதிகளும்புராணங்களும் ஆகமங்களும்இந்துமத முழுதிற்கும் முதற்பகுதியாகாநிற்பப் பிற்பகுதியானது தென்னிந்தியாவின்கண் நிகழாநின்ற வழக்கவொழுக்க சமயங்களினிடத்துக் தமிழிலக்கியங்களிலாங்காங்குச் செறிந்து காணப்படுகின்றது. வைதிக கிரியைகளினும் மற்றைய கிரியைகளினும் வேதகானஞ்செய்யப்படுதல் போலவே தென்னிந்தியாவிற் பல்வகைப்பட்ட மதக்கிரிகைகளினும் தேவாரத் திருப்பதிகங்களும் நாலாயிரப்பிரபந்தப் பாட்டுகளும் பாடப்படுகின்றன. இக்கிரியைகள் முதன்முதலில் தென்னிந்தியாவிலுண்டாய்ப் பின்னர் எந்தவுருவிலாவது இந்தியாமுழுவதும் பரவிவிட்டன. தென்னாடுகளில் விசேடமாய்க் காணப்படுஞ் சைவவைணவசமயங்கள் வடமொழியை யறவே நீத்துவிட்டுத் தமிழ்மொழியி னுணர்ச்சிமட்டிலேயே திருத்தியடைவனவாம். ஆகவே தமிழிலக்கியத்திற் சமயப்பகுதியைப்பற்றிச் சரித்திர ரீதியாகச்செவ்வனே யாராய்ச்சிசெய்தல்தமிழ்பயிலுவோர்க்குப்பெரிதும்பயன்படும்; சமயநூல்களை யேற்படுத்தியவராகக் கூறப்படுஞ் சமயாசாரியர்தஞ் சரிதங்களையுங் காலவரையறையினையு மறிவுறுத்தப் போதுமானவிடயங்களை யவர்க்கு அளிக்குமென்பதற்கையமின்று. மேலுஞ்சமயம் ஆதியில் உற்பவித்ததற்குக் காரணமாயிருந்த சாதனங்களையறியத்தக்க நிலைமையிலிருப்பதுடன், காலக்கிரமத்திலஃதடைந்த வேறுபாடுகளையுஞ் சீர்திருத்தங்களையும் படிப்படியாய் வளர்ந்து தற்காலநிலைமையையடைந்த வழியுமினிது தெரிக்குந்தன்மை

யுடையராவோம்; இன்னும் பிறர்கொண்டதவறான வெண்ணங்களையும் பிசகியகோட்பாடுகளையும் மாற்றித் தோம்பலபொருந்தப் பாரித்துரைக்குங் கட்டுரையினைத் தெளித்துப் புராணப்பொய்க்கதைகளி னூட்பொதிந்துகிடக்கு முண்மையினைக் கொழித்துப் பிரித்தெடுக்கு மாற்றலு முடையராவோம். தமிழிலக்கியத்தின் சமயப்பகுதியினையதிநுட்பமாயுஞ் சரித்திரரீதியாயு மாராய்வதனானே போதரும் பெரும் பயன் அளவிலதென்பதைச் சிற்சிலவுதாரண முகத்தானே விளக்குதும்.

ஒவ்வொரு வைணவாலயத்துள்ளும், திருமால், இலக்குமி, இன்னும் பலதேவர்கள் முதலிய யாவரோடு மொருங்கு வைத்துப் பூசிக்கப் பெறும் வைணவசமய குரவராம் பன்னி ராழ்வார்களின் கால வரையறையினைப் பற்றி யொருவாறு பேசப்புகுவாம். அவ்வாழ்வார்கள் தம்பெயரினையும் அவர்கள் பிறந்த வாண்டெனக் குறிக்கப்படுங் காலத்தினையு மடியிற்காண்க.

1. பொய்கையாழ்வார் : துவாபரயுகம்; 862902 - ஆம் ஆண்டு. அஃதாவது 6091வருடங்களுக்கு முன்பு அல்லது கி. மு. 4201.
2. பூதத்தாழ்வார் : அவ்வாண்டே.
3. பேயாழ்வார் : அவ்வாண்டே.
4. திருமழிசையாழ்வார் : அவ்வாண்டே.
5. நம்மாழ்வார் : கலியுகந் தோன்றிய 43 - ஆம் நாள்; அஃதாவது கி. மு. 3101.
6. மதுரகவியாழ்வார் : துவாபரயுகம் 863879 - ஆம்ஆண்டு; அஃதாவது கி. மு. 3224.
7. குலசேகராழ்வார் : கலியுகம் 28-ஆம் ஆண்டு; அஃதாவது கி. மு. 3075.
8. பெரியாழ்வார்: கலியுகம் 47-ஆம் ஆண்டு; அஃதாவது கி. மு. 3056.
9. கோதையாழ்வார் (ஆண்டாள்): கலியுகம் 98-ஆம் ஆண்டு; அஃதாவது கி. மு. 3005.
10. தொண்டரடிப்பொடியாழ்வார் ; கலியுகம் 289. ஆம் - ஆண்டு; அஃதாவது கி. மு. 2814.
11. திருப்பாணாழ்வார் : கலியுகம் - 343 ; அஃதாவது கி. மு. 2760.
12. திருமங்கையாழ்வார் : கலியுகம் 398; அஃதாவது கி. மு. 2705.

மேற்குறித்த ஆழ்வார்களின் காலவரையறை அதிசயிக்கத்தக்கவாறு பாரித்துரைக்குங் கட்டுரைபற்றிவந்த பெற்றியதேயாமாகலிற், சிறிது

முண்மையெனக் கோடற் பாலதன்று. மேற் குறித்தாங்கு கூறுவார்தங் கூற்று எட்டுணையும் நிலைபெறு தென்பது பின்னரியாங் கூறுவதனுனே யினிது விளங்கும். இவ்வாசிரியர்களா லெழுதப்பெற்ற நூல்களின் நடையினையும் உட்பொதிந்த பொருளினையும் ஆங்காங்கு எடுத்துக்கொண்ட மேற்கோள்களையுஞ் சரிதங்களையுஞ் சிறிது உற்று நோக்கின் அஃது அவர்தங் கூற்றுப்பொய்யெனத்தக்க சான்று பகரும். நாலாயிரப் பிரபந்தத்தினையும் யாம் மேற் குறித்த பத்துப்பாட்டு (பத்துச் செய்யுள்களான் முடிந்தது) அகநானூறு, புறநானூறு, கலித்தொகையாதிய பிரபந்தங்களையும் யாவரேனு மொருவர் செய்யுணடை பாஷைநடைகளைப்பற்றி நன்கறிவான் சீர்தூக்கிச் செவ்வனே யாராயப்புக்குழி, வைணவர்களின் தோத்திர ரூபமாயுள்ள பாடல்களனைத்தும் பொதுவிற் புதியனவாகவே காணப்படுகின்றன வென்றும் சங்கத்துப் புலவர்களெனக் கூறப்படும் பத்துப்பட்டாதிய நூல்களின் ஆசிரியர்தஞ்செய்யுட்கள் பழைய சொற்களும் சொற்றொடர்களும் நிரம்பப் பெற்றுள்ளன வென்று முணராதிரார். நாலாயிரப் பிரபந்தத்தின் பாஷை நடை, செய்யுணடை சொற்றொடர்ப் பொலிவு முதலியவற்றினைப் பற்றி யாங் கூறுவதைச் சித்தாந்தப்படுத்த வேண்டிய விடனிஃதன்று. மேற் குறித்த தோத்திரப்பாக்கள் யாக்கப்படுங் காலத்திலோ அன்றி யவைகட்கு முந்தியோ இருந்தவர்களாயும் மேற் கூறிய நூல்களிலாங்காங்கு கூறப்பட்டவர்களாயு முள்ள மன்னர் குறுநில மன்னராதியவர்களின் சரிதையைக் கூறப்புகுவாம். மேற் கண்ட பன்னிரு குரவருள் ஒருவராய விஷ்ணுசித்த ரென்றும் பட்டாபிரான் என்றும் பெயர் வாய்ந்த பெரியாழ்வாரைப் பற்றி முதற்கட் கூறுவாம்.

மதுரை மாநகரின்கண் வல்லபதேவ பாண்டியன் அரசு புரிந்தொழுகு நாளில் அவ் விண்டுசித்தரென்னும் பெரியோர் அவண்போந்து ஆண்டு வைணவமதத்தை நிலைநிறுத்தி யம்மன்னனையு மம்மதத்தை மேற்கொண்டொழுகுமாறு செய்தனர். அக்காலத்தில் ஒரு சன்னியாசி மதுரையை யடைந்து ஓரந்தணன் வீட்டுத்தெற்றியிற் படுத்துறங்கிக் கொண்டிருந்தான். அரசன் நகரிசோதனையின் பொருட்டு மாறுவேடம்புனைந்து வழக்கம்போலூரைச் சுற்றிவருகையிற் றெற்றியிலிருந்த சன்னியாசியுடன் பேசத்தொடங்கினுன். அப்போழ்து துறவி மன்னனைநோக்கி "ஐய! விண்ணுலக வின்பத்தை யடையுமாறு முயறலேதகுதி. அதுபற்றி உண்மைக்கடவுளை யோர்ந்தறிந்து வழிபட்டு ஏனைய தேவதாந்தரங்களை விடுத்து நல்வழிச் சேறலே யமைவுடைத்" தென்று கூறிவிடுத்தான். அவ்வுபதேசமொழியின் உண்மையறிந்த மன்னன் மாளிகையடைந்து மறுநாட்காலை யிதனைக் குறித்து மந்திரியை யுசாவத்தலைப்பட்டனன், அமைச்சனும் மன்னனை நோக்கி "ஐய! பெரியதோர் தறிநட்டு அதன் நுனியில் பொன்முடிப் பொன்றை யமைத்து, தத்தஞ்சமயத்தின துண்மையை யெடுத்து மொழி

வார் தமக்குள் உண்மையெனத் தனது மதத்தை நிலைநிறுத்துவாற்கு அப்பொன்முடிப்புக் கொடுக்கப்படுமென்று யாண்டும் பறையறைவித்தாலொரு கா லுண்மைவெளிப்படும்" என்று மொழிந்தான். புத்தர்களும், சைனர்களும், சைவர்களும், இதர மதத்தினர்களும் ஒருங்குசேர்ந்து வல்லபதேவ பாண்டியன் அவைக்கண் ஈண்டினர். திருமால் வில்லிபுத்தூரில் வதிதரும் விண்டுசித்தருடைய சனுவிற்றோன்றி அவரையும் பாண்டியனவைக்கேகுமாறேயினர். மேலும் அந்நாட்டின்கண் வைணவ சமயத்தை நிலைநிறுத்தல் வேண்டுமென்றும், ஏனைய சமயவாதிகளை அவர் வென்று வெகுமதி பெறுவாரென்றும் அவர்க்குத்திருமாலே யருளிச்செய்தார். திருமாலின் ஆணையைச்சிரமேற்கொண்டு சித்தரும் சிவிகையேறி தமது பரிவாரத்துடன் மதுரைக்கு வழிக்கொண்டனர்.

மன்னனும் அடியார்களாற் றாங்கப்பட்ட சிவிகையிலிவர்ந்து விண்டுசித்தர் வருவதை யுணர்ந்து தானும் தனது அமைச்சருடன் அவரை யெதிர்கோட்கருதிச் சென்று வணங்கி ஆதித்தியம் புரிந்து தனது அரண்மனையிலே பேயவரையிரீஇயினன். பிறகு நடந்த சமயவாதத்திற் சித்தரே வென்றனர்; விண்டுவே பரம்பொருள் என நிலைநிறுத்தினர். வென்றவர் கொள்ளுமாறு வைத்திருந்த பொன் முடியும் தம்பத்தின் முடியிலிருந்து சித்தர் தம் அடியில் விழுந்தது. ஆண்டுக்குழீஇயிருந்தார் கண்ணும் மனமும் மலர்ந்தன. விண்டு சித்தர் தம் பெருமையென்னென யாவரும் வியந்தார்.

மேற்கூறிய வல்லபதேவன் என்னும் பாண்டியன் யாவன்? யாண்டுந் தன் புகழ் பரப்பிய அதிவீரராம பாண்டியனே யவ் வல்லபதேவ பாண்டியன் என்று வற்புறுத்துஞ் சாசன மொன்றைத்தான் கண்டு பிடித்ததாகவும், வல்லபதேவனால் நன்கொடை யளித்தமைக்குச் சான்றாக அநேகம் சாசனங்கள் தமக்குக்கிடைத்த வென்றும், ஆயினும் பின்னர்க் கூறிய சாசனங்களிற் காலங் குறிக்கப்பட வில்லையென்றும் டாக்டர் கால்டு வெல்துரையவர்கள் சொல்லுகின்றார். எனினும் அதிவீரராம பாண்டியனே வல்லபதேவ பாண்டியனென்று வலியுறுத்துஞ் சாசனத்திற் காலங்குறிக்கப்பட்டிருக்கின்றது. அச்சாசனம் பாண்டியனது அரசாட்சியின் நாற்பதாவது ஆண்டாகிய சகம் 527-இற் பொறிக்கப்பட்டது. அஃதாவது கி. பி. 1605-ஆம் வருடமாம். எனவே வல்லபதேவன் பட்ட மடைந்த வருடம் கி. பி. 1565-ஆகும் (* கால்டுவெல்துரை யெழுதிய திராவிட பாஷைகளின் ஒப்புநோக் கிலக்கணம் 145-ஆம் பக்கம் பார்க்க.)

வைணவசமய நூல்களி னுரையாசிரியருளொருவராகிய பிள்ளைலோகஞ்சீயர் என்பவர் விண்டுசித்தரைப் புகழ்ந்துரைக்கும் பாவினுளொன்றாகிய,

* Caldwell's Comparative Grammar of the Dravidian Languages.

"பாண்டியன் கொண்டாப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தோத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று."

என்னும் வெண்பாவினுக் குரையெழுதப்புகுங்கால்,

"பாண்டியன் கொண்டாட, தென்னன்கொண்டாட என்னுமாபோல் நமக்குப்பரத்துவநிர்ணயம் பண்ணித்தரும்படி பட்டர்பிரான் வந்தானென்று பாண்டியனான ஸ்ரீ வல்லபதேவன் சொல்லிக்கொண்டாட" என்றுரையெழுதிப்போந்தார்.

மேற்குறித்த உரையாசிரியராகிய பிள்ளைலோகஞ்சீயர் என்பவர் **அஷ்டதிக்கஜங்கள்** (எட்டுத்திசையானைகள்) என்ற சிறப்புப்பெயர்வாய்ந்த மணவாளமாமுனிவர் தஞ் சீடர்கள் எண்மரிலொருவராகியபரவஸ்துபட்டர்பிரான் ஜீயருடைய மாணுக்கரென்று கூறப்படுவதனுனே சற்றேறக்குறைய கி. பி. 14-ஆம் நூற்றாண்டினிறுதியி லிருந்தாரென்பது புலப்படும்.

முன்னரியாஞ்சுருக்கமாய்க்கூறிப்போந்தவிண்டுசித்தாதுசரிதையையே விடயமாகக்கொண்டு, கி. பி. 1509 முதல் கி. பி. 1530 வரையிலரசாண்ட கிருஷ்ணதேவராயன் அவைக்களத்து வீற்றிருந்த அலசாணிப்பெத்தண்ணன் என்னுங்கவி ஆந்திரபாடையிலொரு நூலியற்றியிருக்கின்றான். ஆதலான் இக்கவி நூலியற்றியகாலஞ்சற்றேறக்குறைய கி. பி.1520 ஆம் ஆண்டெனக்கொள்ளலாம்எனவே விஷ்ணுசித்தியமு என்றவக்காவியத்தின் நாயகனாகிய விண்டுசித்தர் வசித்தகாலஞ் சற்றேறக் குறைய கி. பி. 1509 - ஆம் ஆண்டெனத் துணியலாம்.

அற்றேற் பல்லோர் குழீஇய அவைக்களத்தே வைணவ மதத்தை மெய்ச் சமயமென்று நிலை நிறுத்திய விண்டு சித்தரது காலத்தரசாண்ட வல்லபதேவ பாண்டியனும், கி. பி, 1605 - ஆம் ஆண்டி லரசாட்சி புரிந்த அதிவீரராம பாண்டிய னென்னுஞ் சிறப்புப் பெயர் வாய்ந்த வல்லபதேவ பாண்டியனு மொருவனே யென்றெண்ண லடாது. அவர் தங்காலமென் னென்றாய்வுழி, கி. பி. 1113 ஆம் ஆண்டில் மகிஷாசுர புரத்தில் (Mysore) அரசாண்டவிஷ்ணுவர்த்தன னென்னும் மன்னன் காலத் திருந்தனர் இராமாநுஜாசாரியர் என்பவர்; இவரானே யேற்படுத்தப்பட்ட சமயம் இவரது சீடர்களாய எழுபத்து நான்கு சிங்காதனாதிபதிகளுடைய காலத்திலாவது அன்றியவர்க்குப் பிற்காலத்திலாவது பரவுதலுற்றிருத்தல் வேண்டும். வைணவசமயத்தையுண்டாக்கியவர்இராமாநுசர்என்றுகொள்ளப்படுவதனானே விண்டுசித்தர் அவர்களுக்கும் முன்னிருந்தாரென்று நம்புறுதற்கிடனின்று. மேலும் மதுராபுரியை யடிகோலி நிருமித்த குலசேகரபாண்டியனாதியாகக்கூன்பாண்டியனு மவன்புதல்வனுமிறுதியாக மதுரையி லரசாண்ட மன்னவருடையகால

த்தி லெவ்வமயத்தி லேனும் மதுரையில் வைணவமதம் நிலைபெறநாட்டப் பட்டது என்று எவ்வாற்றானு மறியகில்லேமாதலினங்ஙனங் கோடலேலாது.

ஆலாசிய மான்மியம் முதலிய தலபுராணங்கள் யாவும் மதுரையிற் கோயில்கொண் டெழுந்தருளிய சிவபெருமான துயர்வு தோன்றக் கூறப்பட்டனவாமாதலின், அவைகளுள் வைணவ மதத்தினுயர்வைக் குறிக்கும் விடயம் ஒன்றேனு மொரு தலைபாகக் கூறப்பட மாட்டாது; எனவே யதனை அப்புராணங்களு ளிருக்குமாறு எதிர்பார்த்தல் தவறு, என்றவாதமு முண்டாகலாம். அதற்கு யாமு முடன்படுகின்றோம்; எனினும் மதுரையி லெவ்வமபத்தி லேனும் வைணவ மதம் தாபிக்கப் பட்டிருத்த லுண்மையா மாயின், அஃது ஆதியிலிருந்த சமயப் புலவர்களாலாவது, முனிவர்களாலாவது, உரையாசிரியர்களாலாவது தமது நூலின்கட் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கி. மு. 3 - ஆம் நூற்றாண்டு முதல் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டளவும் பௌத்தமதமும் சமணசமயமு மத்தேயத்திற் பரவி யிருந்தனவென்றும் அக்காலத்தின் பின்னரே யச்சமயங்கள் க்ஷீணதசை யடைந்தன வென்றும் பன்னூல்களையும் நன்காய்ந்த புலவர்களானே கொள்ளப்படுகின்றன. கி.பி. எட்டாவது நூற்றாண்டிற்கு முன்னமே வைணவமதம் உண்டாயதென்பது கொள்ளற்பால தன்று. இவ்வல்லபதேவ பாண்டியன் இன்னானென்றும், அவனுடைய காலம் இன்னதென்றும் ஆய்ந்தறிந்து அளவிட்டுரைத்த லேலாதெனினும் விண்டுசித்தர் கி. மு. 3056 என்னும் அவ்வளவு முற்பட்ட காலத்திற் றோன்றவில்லை யென்று யாமொருதலைபாய்த் துணிந்து கோடலாம். இன்னணங் கூறிய வுறுதிமொழி யேனைய வைணவாசிரியருட் சிலர்தங் காலத்தைப் பின்னராய்வதனாற் பெறப்படுங் காரணங்களினானே நன்குறுதிப்படல் காண்க.

தனது பராக்கிரமத்தானேயாண்டுந் தன்புகழ் நிறீஇயவனும் ஏனைய மன்னர்களைத் தன்னடிப்படுத்தி யாண்டவனுமாய கோச்செங்கணானென்னுஞ் சோழனைப்பற்றித் தமது பிரபந்தத்திற் சிறப்பித்துக் குறிக்குந் திருமங்கையாழ்வாரது காலத்தைப்பற்றி யினி யாராபத்தொடங்குவாம். கோச்செங்கணான் சேரநாட்டின்மேற் படையெடுத்துச்சென்று சேரமன்னன் கணைக்காலிரும்பொறையினைக் கழுமலமென்னுமிடத்து வெங்கண்டு அவனைச் சிறைகொண்டனன். அப்போரினைப்பற்றிப் பொய்கையா ரியற்றிய நாற்பதுபாக்களானியன்ற **களவழி நாற்பது** என்னுஞ் சிறுநூலின்கண் பரக்கக் காணலாம். இந்நூலின் கடையிற் பின்வருமாறு இறுதிக்கூற்றொன்று சேர்க்கப்பட்டுளது.

“சோழன் செங்கணானும் சேரமான் கணைக்காலிரும்பொறையும் போர்ப்புறத்துப் பொருதுழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட **களவழி நாற்பது** முற்றிற்று.”

# காதம்பரிச் சுருக்கம்.

## பீடிகை.

காவ்யம் கத்திய பத்திய காவ்யங்களென இருவகைப்படும். கத்-பேசுதல்; பத்-யாப்பிலக்கணப்படி யாத்தல்; அதாவது சாதாரணமாய் விவகாரத்திற் பேசப்படும் பாஷையைப்போல் இயற்றப்படும் நூல் கத்தியகாவ்யம். எதுகை, மோனே, ஓசை, அணி முதலியவை அமையப்பெற்று விசேஷமான கட்டனேகளுடன் இயற்றப்படுவது பத்தியகாவ்யம். காவ்யமானது ரஸாத்மகமாயிருக்தல் வேண்டும்; அதாவது (ரஸம்) சுவை பொருந்தி யிருத்தல்வேண்டும்; "ரஸாத்மகம் காவ்யம்" என்றிருத்தலி னென்க. கத்திய நூல்களுக்கும் பத்திய நூல்களுக்கும் ரஸமே பிரதானம் அந்த ரஸம் ஸ்வதந்தரமானது. ரஸத்துக்கும் யமகம், ப்ராஸம் (எதுகை), சிலேஷம் (சிலேடை) வர்ண நாமாதுர்யம் (வருணனேப்பொலிவு), சப்த ரசனை (சொற்பொலிவு) என்னும் இவற்றிற்கும் சம்பந்தம் எத்துணேயுமின்று.

செய்யுள் நூல்கள் உண்டாய பின்னர் வசன நூல்கள் உண்டாவது இயற்கை நியமமாம். ஏனெனில், அறிவில்லாக்காலத்துப் பொய்க்கற்பனேகள் உண்டாவது போல, அறிவு உண்டானபின்பு செய்யப்படுவதில்லே; அப்பொழுது விசாரணே சக்தி ஜநிக்கின்றது. விசாரணு சக்தி பிறக்கும்பொழுது மனிதர்களுடைய மனது ஸத்யாஸத்யங்களே ப்ரதிபாதிக்கும் விஷயங்களில் ஈடுபடச்செய்கின்றது. இத்தகைய விஷயங்களுள்ள நூல்களுக்கு யாப்பிலுல் யாத்ததாய செயற்கை நடையாகிய செய்யுள் நடை சரிப்படுவதில்லே. விவகாரத்திலுள்ள இயற்கை நடை அல்லது வசனநடை பெரிதும் பயன்படும். இக்காரணத்திலுல் அறிவும் நாகரீகமும் பெருகப்பெருக, பத்திய நூல்கள் குறைந்து கத்திய அல்லது வசன நூல்கள் நிறைந்து வருகின்றன.

இவ்வாறு வசன நூல்கள் அதிகமாகி, நூலியற்றுதல் இவ்விதமென இலக்கியமாதல் வித்தியாபிவிர்த்திக்கோர் அடையாளம். கேட்போர் காதுக்கின்பம் பயக்கும் ஸ்வர்ஸம், யோகம், சொல்லணி, பொருளணி முதலிய வெளிச்சாதனங்கள் செய்யுளுக்கு வேண்டியனபோல் வசனத்துக்கு ஆவசியகமின்று. பொருட் பொலிவிலுலும், ஸாமஞ்ஜஸ்யத்திலுலும், வசன நூல்கள் படிப்போர் உள்ளத்தை களிக்கச்செய்கின்றன.

இத்தகைய வசன நூல்களேப் பண்டைக்காலத்திலே பாணன், ஸுபந்து, தண்டி என்பவர்கள் கீர்வாணவாணியில் இயற்றினர்கள். இவர்களுட் பாண கவியே சிறந்தவன்.

இந்தப் பாணகவியின் தந்தை சித்ரபாநு; தாய் ராஜ்யதேவி. இவர் பிறந்த பதினன்காம் ஆண்டில் தந்தை கால தர்மத்தை அடைந்தார். பத்ர

நாராயணன், ஈசாநன், மயூரன் என்பவர்கள் இவரது பாலிய ஸ்நேஹிதர்கள்.

பாணனது ஜந்மஸ்தாநம் சோண நதியின் மேற்கிலுள்ள ப்ரீதிகூட மென்னும் கிராமம். இதே நதித் தீரத்தில் யஷ்டிக்ரஹ மென்னும் கிராம மொன்றுள்ளது. இங்கிருந்து முன்னே போனால் ஸ்ரீகண்ட மென்னும் தேசம் சமீபிக்கின்றது. அந்தத்தேசத்திலே தான் ஹர்ஷராஜனுடைய ராஜதாநி. பாணகவி அவ்வரசனுடைய ஆதாரத்தில் இருந்தவர். கி. பி. 650-ஆவது வருஷத்திற் பாணன் ஜீவித்திருந்ததாய் ஓர் இதிஹாஸத்தினால் தெரிய வருகின்றது.

பாணகவி காதம்பரி, ஹர்ஷசரித்ரம், சண்டிகா சதகம், பார்வதீ பரிணய நாடகம், ரத்நாவலி நாடகம் என்னும் ஐந்து நூல்களை வடமொழியிலேயே இயற்றினர். இவ்வைந்தனுட் **காதம்பரி** என்னும் நூலே உலகத்தில் மிகவும் ப்ரசித்தமானது. இது சம்பூர்ண வசநரூபமானது. இதில் அதிமநோஹரமான கதை உளது. இதிற் **காதம்பரி** என்னும் கந்தர்வ கந்நிகை முக்கிய நாயகியாயிருத்தல் பற்றி கவி இந்நூலினுக்குக் காதம்பரி யென்னும் நாமம் சூட்டினர்.

இக்காப்பியத்தில் வடமொழியின் கண்ணே சகல வணிகளும், குணங்களும் உள. சிருங்கார கருணரஸங்கள் தாமே ஸாக்ஷாத்காரமாயிருக்கின்றன, அற்புத ரஸமும் கூடிய வரையில் உள்ளது. இடையிடையே நீதி போதகமான பாகங்களும் உள. இதிற் காட்டப்பட்டிருக்கும் கற்பனு சக்தியைக் கண்டு எல்லாப்புலவர்களும் பெரிதும் வியப்புறுவர். வர்ணிக்கும்படியான லோகத்தர் பத்ததி பாணனுக்கேதகும். ஸம்ஸ்கிருத பாஷை இயற்கையிலேயே மநோஹரமானது. அதிலும் பாணனைப் போன்ற கவிச்சிரேஷ்டன் கையிற் கிடைத்த பின்னர்ச் சொல்ல வேண்டுவ தியாதிருக்கின்றது.

இந்நூல் பூர்வபாகம் உத்தரபாக மென்னும் இரண்டு பிரிவுகளையுடையது. நூலின் ஏறக்குறைய முக்காற் பங்கு பூர்த்தியானதும் பாணன் பரலோக மடைந்தான். அநந்தரம் அவனுடைய குமாரனாகிய பூஷண பட்டன் என்பவன், தந்தையியற்றிய பாகத்துக்குப் பூர்வ பாகம் எனப்பெயரிட்டுத் தான் உத்தரபாகத்தை யியற்றி நூலைப்பூர்த்தி செய்தான். பிதாவின் ஆப்திகத்துக்குள்ளாகப் பூர்த்தி செய்ய வேண்டு மென்று சங்கற்பித்துக் கொண்டு அவ்வாறே இயற்றி முடித்ததாகச் சொல்லுகின்றனர். இவ்வாறு பூர்த்தியெய்திய நூலானது தன் தந்தையின்பேராலேயே வழங்கப்பெற்றுப் பிரசித்தமாகவேண்டும் என்னுங்கருத்துடன் தன்பெயரை அவன் தான் இயற்றிய உத்தரபாகத்திற் காட்டவில்லை. இஃதவனது வினயகுணத்துக்கும் பிதிர்பக்திக்கும் பூஷணமேயன்றோ?

இக்காதம்பரிக் கதையை அடிமுதல் நுனிவரையிற்படித்து இதிற் காட்டியிருக்கும் கதாதோரணையை ஞாபகத்துக்குக் கொண்டுவந்தால் மனத்துக்கு ஆநந்தமும் ஆச்சரியமும் உண்டாகாமற் போகாவென்று சுவாநுபமாய்ச் சொல்லுகின்றேன். எத்தனைமுறைபடிக்கினும் மீண்டும் மீண்டும் படிக்கவேண்டுமென்ற அவாவேமேலெழுகின்றது. அத்தகைய சமத்காரங்களமைந்த வர்ணனைகள் இதிலுள. இவ்வாறு அநேககுணங்களால் மனோஹரமானதனாலும் இந்நூல் ஆயிரத்திருநூறு வருடங்களுக்குமுன்பு இயற்றப்பட்டிருத்தலாலும், படிப்பவர்களுக்குப் பண்டைக்காலத்துக் கற்பனைகளும், அக்காலத்தரசர்களுடைய ஐசுவரியம் நடவடிக்கை முதலியவை இதனால் அறியப்படுகின்றவாறு மற்றொன்றாலும் தெரியவராது என்பது நிராக்ஷேபமானது.

இத்தகைய ஸமஸ்கிருத காதம்பரியிலுள்ள அதிமனோஹரமான கதையை நம் தமிழ்நாட்டாரும் படித்தாநந்திக்குமாறு சுருக்கமாய்த் தமிழ்ப்படுத்துகின்றேன்.

இதில் இராஜஸம்பத் வர்ணனை, விந்தியாரண்ய வர்ணனை, அகஸ்திய மஹர்ஷியின் பார்யை லோபாமுத்ரா மூப்படைந்த வனவர்ணனை, பஞ்சவடியில் ஸீதாராம லக்ஷ்மணர்கள் இருந்த காலத்திய விர்த்தாந்தம், பம்பா ஸரோவரத்தின் அருகில் ஸப்ததாள விருக்ஷங்களின் பக்கத்திலுள்ள சால்மலி விருக்ஷ வர்ணனை, மாதங்கன் முதலாய கிராதர்களது வேட்டை வர்ணனை, இளங்கிளிகளுக்கு வந்த கஷ்டகாலவர்ணனை, ஜாபாலி முதலிய ருஷிகள் உறையும் தபோவன வர்ணனை, சந்திரா பீடன் வித்தியாப்பியாசம், சந்திரா பீடனுடைய வித்யா மந்திரத்தினின்று பார்த்தால் உஜ்ஜயினி அளிக்கும் காட்சிவர்ணனை, சந்திரா பீடனுக்குச் சுகநாஸன் உபதேசித்த இராஜநீதி, அச்சோதப் பொய்கைவர்ணனை, மஹாசுவேதையென்னும் கந்தர்வப் பெண்மீது மோகங்கொண்ட புண்டரீகன் எனும் நண்பனை அசத்மார்க்கத்தினின்று விலக்க வேண்டுமென்று கபிஞ்ஜலருஷி மனப்பூர்வமாய்ச் செய்த முயற்சியின் வர்ணனை, மஹாசுவேதையினது கற்பின் வர்ணனை, கந்தர்வலோகத்திலுள்ள காதம்பரியின் கன்னிமாட வர்ணனை, காதம்பரியின் மனோரதப்ராப்தி, வைசம்பாயனனென்றும் கிளியின் பரிணாமம் ஆகிய இவ்வளவும் வெகு மனோஹரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. முக்கியமாய், கலங்காத மனவுறுதியுடைய ஸ்திரீ புருஷர்கள் தம் நண்பர்களுக்குக் கஷ்டம்வந்த காலையில், அவர்கள் நிமித்தம் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதும் அவர்களுக்குச் சுபமங்கள சௌபாக்கியங்கள் உண்டாகு நிமித்தம் எத்துணை ஸாஹஸம் செய்கிறார்கள் என்பதும் அப்படி ஒருவர் மேல் அத்தியந்தம் பிரீதியுற்றிருக்கும் காலத்தும் பாபவாஸனையினாற் சில கெடுதிகள் வந்துறுகின்றன வென்பதும் அப்பாபம் பரிஹாரமாவதற்கு

எம்பெருமானுடைய தியானமே பரமசாதன மென்பதும் இந்நூலின் தேர்ந்தக் கருத்துக்களாம்.

## காதம்பரிக் கதையில் வரும் பாத்திரங்கள்.

**சூத்திரகன்**—விதிசா நகரத்தின் அரசன், (சந்திராபீடனது இரண்டாஞ் ஜன்மம்)

**குமாரபாலிதன்**—அவனது அமைச்சன்.

**மாதங்கன்**—ஒருவேடன்.

**ஜாயாலி**—ஒரு ருஷி, இவரது ஆச்சிரமத்தில் வைசம்பாயனனென்னும் கிளி காலம் கழித்தது.

**ஹாரீதன்**—அவர் குமாரன்.

**தாராபீடன்**—உஜ்ஜயினீ தேசாதிபதி, சந்திராபீடனுக்குப் பிதா.

**விலாஸவதி**—அவனது பட்டஸ்திரீ.

**சந்திராபீடன்**—குமாரன் (புண்டரீகனது சாபத்தாற் பூமியிசையவதரித்த சந்திரன்).

**பத்திரலேகை**—சந்திரா பீடனுடைய பணிவிடைப் பெண் (பூமியில் அவதரித்த ரோஹிணி;

**சுகநாஸன்**—தாராபீடனது அமைச்சன்.

**மநோரமை**—சுகநாஸன் மனைவி.

**வைசம்பாயனன்**—சுகநாஸனுடைய புதல்வன், சந்திராபீடனது நித்யமித்திரன் (புண்டரீகனது இரண்டாஞ் ஜன்மம்; இவனே மஹாசுவேதையின் சாபத்தாற் கிளியாய்ப் பிறந்தனன்).

**இந்திராயுதம்**—சந்திரா பீடனது குதிரை (கபிஞ்ஜல னுடைய இரண்டாம் ஜன்மம்)

**சுவேதகேது**—இந்த முனிவர் லக்ஷ்மி தேவியினால் புண்டரீக னென்னு மகனைப் பெற்றவர்.

**புண்டரீகன், கபிஞ்ஜலன்**—உயிர்த் தோழர்களான ருஷிகுமாரர்கள், புண்டரீகன் சந்திர னுடைய சாபத்தினால் வைசம்பாயனனானான். கபிஞ்ஜலன் ஒருமுனிவரது சாபத்தால் இந்திராயுதமென்னும் குதிரையானான்.

**ஹம்ஸன்**—மஹா சுவேதையின் தந்தை, இவன் கந்தர்வன்.

**கௌரி**—மஹாசுவேதையின் அன்னை. இவள் கந்தர்வஸ்திரீ.

**மஹாசுவேதை**—கௌரீ ஹம்ஸர்களென்னும் கந்தர்வதம்பதியின்மகள்; புண்டரீகன் மீது காதல்கொண்டவள்,

**தரளிகை**—மஹாசுவேதையின் பணிவிடைப்பெண்.

**சித்திரரதன்**—காதம்பரியின் தந்தை, கந்தர்வன்.

**மதிரை**—காதம்பரியின் அன்னை. கந்தர்வஸ்திரீ

**காதம்பரி**—ஷீகந்தர்வ தம்பதியின் மகள். சந்திராபீடன் மீது காதல் கொண்டவள்.

**கேயூரகன்**—காதம்பரியின் சேவகன்.

**மதலேகை**—காதம்பரியின் பணிவிடைப் பெண்.

**லக்ஷ்மி**—சூத்திரக ராஜனுக்குக் கிளியைக் காணிக்கையாய்க் கொணர்ந்த சண்டாள கந்நிகை.

தி. அ. ஸ்வாமிநாதையர்.

---

## பெண்கல்வி விவாதம்.

மாதர்கள் படித்த லாலே மற்றுத்தங் கடமை மீறி
நாதரைப் பணியா ரென்று நம்மவர் பலரு மஞ்சித்
தீதது தீத தென்று செப்புவர் தேரி னஃது
பேதைமை மட்டு மன்று பெரும்பழி நமக்கெல் லாமே.

---

1 பேதைமை மாதர்க் கென்றும் பெருங்கல னுமென் றௌவை
யோதியவுண்மை தன்னை யுணர்ந்துபெண் கல்வி பற்றி
வாதுக ளாடு மைந்தர் வகையுற்றிர் திலரே யென்றும்
யாதனு பவமு மெய்தா விளைஞர்க ளுணரா ரென்றும்.

2 ஆடவர்க் குரித்தாங் கல்வி யணிபுனை மகளிர் தாமு
நாடுதல் வழக்கன் றென்று நலனுற மாதர் நம்முட்
டேடுவ தொழுக்க மென்றுந் தேர்கிலர் சிறியா ரென்றுங்
கூடிய பலரு மொன்ருய்க் கூறுவர் சீறு வாரே.

3 மாந்தருக் கழகு கல்வி மாதருக் கழகு கற்பு
வேந்தருக் கழகு செங்கோல் வித்தகர்க் கழகு ஞானஞ்
சார்ந்தற நெறியுற் ருர்க்குச் சலனறு தன்மை மற்று
நாந்தக வில்வே லார்க்கு நலன்றரு வீர மாகும்.

4 நலனொடு பலனு மாகு நங்கைய ரிடத்தே சற்புக்
குலனையும் விளங்கச் செய்யும் கொண்டவர்க் கணியு மாகும்
பலனெனை நலனென் றாகும் படிப்பினாற் பாவை யர்க்குப்
பொலனணி மகளிர்க் கெல்லாம் பொற்புண்டோ கற்பின் மிக்கே?

5 அரிவையர் கல்வி தன்னா லடக்கமு மேனைக் கல்விக்
குரியநற் குணமு மெய்தா ரோங்கெழு செருக்கே கொள்வ
ரரியநல் லறிவா லான்ற வாடவர் கொள்வா ராயிற்
றெரிவைய ரடங்கா ரென்று செப்பவும் வேண்டுங் கொல்லோ?

6 நுண்ணறி விலரே யென்பர் நூற்பய னன்று ராய்ந்து
தண்ணளி நிலையி னிற்குந் தன்மைய ரல்ல ரென்ப
ரெண்ணெழுத் தோதி பெண்கொ விகபர சாத கந்தான்
பெண்ணவ ளடையு மென்பர் பேசுவர் பலவா றெல்லாம்.

---

7 நாட்டினின் மங்கை யர்க்கஞ் ஞானமாந் தீபை நன்றாய்
மாட்டிடினபங் கூட்டு ளிட்டு மலர்விழி புறஞ்செ லாமல்
வீட்டின்க ணடைத்து வைத்து வெள்ளிபொற் கலனான் மேலும்
பூட்டித்தா மகிழ்கின் றாரே புல்லறி வாள ரந்தோ!

நா. வே. சுந்தரராஜ ஐயர்.

(இன்னும்வரும்.)

---

## பரீட்சைவினாக்கள்.

### Madras Christian College—VI-Form—August 1899.

I. (*a*) நசேலோபாக்கியானத்தை யியற்றினார் பெயரிட காலசம யங்களும் அவர்செய்த வேறுநூல்களும் யாவை? (*b*) பொருளெழுதுக:— தவிசு, இரும்பூது, சீகரம், வளி, உகைத்தல், ஏர்தல், மீகான், மறுகு, பனகம், கைதை, மூங்கா, உதகம், கான்முளை, நகுலம். (*c*) வைகறை, நல்குரவு, அந் தணன், பன்னகம்: இவற்றிற்குத் தாதுப்பொருள் கூறுக. (*d*) தொழிற் பெயரும் வியங்கோள் வினைமுற்று மெவ்வெப்பொருளில் வரும்? உதாரண மெழுதுக.

II i. இனி வருவனவற்றை யினிதுவிளக்குக:—(1) மாமகரம், வ ண்டுவளைக்கேதவழ மாலோதமூடாடுந் தண்டுவளை. (2) கள்ளமருவீசுங் கழற்றாமரைமலர். (3) பாமேகவண்ணன்பதம். (4) கார்க்குழலரிக்கண்மா தர். (5) உறுவர்குழாமெலா, மின்னும் பார்க்க வெழுதிடுஞ் சீர்த்தியான். (6) கறைதபுகலை. (7) கந்தடுகளிற்றினரலல். (8) வானிற், கழிமதி வருக

வென்றுட் கசிந்தழுமழவு. ii. 'கோமறுகக் கோனுக மேந்தினன்'; 'திருவிற்கு நாயகன்': இத்தொடர்கட்கு இவ்விரண்டு பொருள் கூறுக. iii. கைகடந்து, செய்கென்ருன், மிக்கன்று, நாகணே, இன்னணம், வைத்தஃது, அாையன்: இவற்றிலுள்ள இலக்சணவிசேடமென்ன ? iv. 'எண்ணுதொன்றை யியற்றுதலென்றுந்தீதே': இக்கருத்தடங்கிய குறளை யெடுத்தெழுதுக.

III. (a) i. பான லந்துவ ளைப்பன்மி னார்கண்வா
யான லந்துவ ளைப்பற்று ருதவன்
வான லந்துவ ளைப்படுப் போன்பின்வரழ்
கான லந்துவ ளைப்பதி கண்ணுற்ருன்.

இதற்குப் பதவுரை யெழுதுக.

ii பெருகிய செல்வ ருள்ளும் பயனிலா ருளராற் பேணி
யருகிய செல்வ ருள்ளும் பயனுளா ருளரென் ருய்ந்து
பெரியவர் சொலுஞ்சொற் றேற்றும்பெரியநீர்க் கடலு மாங்சாங்
குரியவெண் மணற்சிற் றூறற் கேணியு முரிய நீரால்.

இதற்குப் பொழிப்புரை யெழுதுக.

(b) முதற்பாட்டின் முதலடிக்கணுள்ள பொருள் கோள்யாது ? அச்செய்யுளெச்சொல்லணி யுடைத்தாம்? இரண்டாம்பாட்டின்கணுள்ள பொருளணியாது ? அதினின்றும் பண்டடியாகப்பிறந்த சொரிநிலைவினே, மொழியிறுதிப்போலி, தொகுத்தல் விகாரம், கொடுந்தமிழ் நாட்டுத்திசைச்சொல், பலபொருளொருசொல் ஆகிய இவற்றிற்கு உதாரணமெழுதுக.

IV (1) 'கூருகிரும் வாளெயிறுந் தானிழந்த கோளரிபோல்'; 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல்': இவ்வுவமைகள் யார்யாரா லெவ்வெவ்வமயங்களி லென்னென்னகருதி யுபயோகிக்கப்பட்டுள ? (2) முக்குற்றமும் ஐந்துதுந்துபியுமாவன யாவை ? (3) 'முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற்போல' என்னும் பழமொழி பொதிந்துள பாவடிகளை யெடுத்து வரைக.? (4) வெல்கொடி, ஊர்புகுந்தான், எழுசுடர், பலதலை, சிற்றுயிர், வாம்பரி, பஃறுவாரம், செல்வுழி, தர்நகர் : இத்தொடர்கட்குப் புணர்ச்சி விதி யெழுதுக.

V. (a) கண்ணனுக்குங் குசேலருக்கு முள்ள வுயர்விழிவுகளைக் குறிக்கும்பொருட்டு வாயில் காவலரருகினிருந்த சில புல்லறிவாளர் கூறிய வுவமங்கள் யாவை ? (b) பெருமான், வேதியன், பார்ப்பான், பாணன், கணவன் என்பனவற்றிற்குப் பெண்பாற்பெயர்களும், மனேவி, பரத்தி, இல்லாள் என்பனவற்றிற்கு ஆண்பாற்பெயர்களும் எழுதுக. (c) திணைபாலிடமெலாஞ் செல்லும் வினைகள் யாவை ? (d) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகளிற் பிரயோக வேறுபாடு முண்டோ ? காரணத்துடன் விடுக்க.

VI. "அவாசிக்கண்ணதாய பைடண புரிவாசியாகிய மணிபத்திரன் என்போன் நன்னெறிபற்றி ஒழுகலான் உளதாய நல்குரவால் பரிபவமுற்று, இவ்வறுமை கெட்டது; சீச்சீ, தயைசாந்தி முதலாகிய குணங்கள் பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத் தோன்றுகின்றனவென்று கணந்தோறும் ஆகுலித்துக் குடும்பப் பாதுகாப்பின் எக்கத்தினால் அறிவு மழுக்கமடைகின்றது; தானிய முதலிய பொருளிலாவீடு இடுகாடு ஒக்கும்; அவன் கல்வி முதலிய குணச் சிறப்புற்றோன் ஆயினும் மனிதர் எண்ணிக்கையில் உளன்; இங்ஙனம் பலவகைத்தாய கவற்சி மிடிமையினால் எய்துகின்றது; ஆதலான் பட்டினியிருந்து உயிர் துறப்பலெனத் துணிந்து மணிபத்திரன் கண்வளர்ந்தான்": இவ்வாக்கியத்தின்கணுள்ள வடசொற்களைக் களைந்து அவை யிருந்த விடங்களில் இயன்ற வளவு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பெய்துவரைக. இன்னுமிதன்கணுள்ள பிழைகளிவையென வெடுத்துரைத்து அவற்றைத் தக்கவாறு திருத்திக்காட்டுக.

VII. (1) வேத்தவைக்குச் சிறந்தானுஞ் சிறவானுமிவரெனக் குறிக்கும் பாடலையும், முற்றெச்சம், இடைப்பிறவரல், உபலக்கணம் என்பனவற்றைக் கூறும் விதிகளையும் வரைக. (2) 'வான், பான், பாக்கு: இவை மூன்றுஞ் சிறுபான்மை தொழிற்பெயர் விகுதிகளாயும் வரும்': இக்கூற்றை யுதாரணங்காட்டி நிறுவுக. (3) 'மழைபெய்து நெல் விளைந்தது': 'கோழிகூவிப் பொழுதுபுலர்ந்தது': இவற்றுட் 'பெய்து', 'கூவி' யென்னு மெச்சங்கட்கு முடிபிலக்கணந் தக்கவிதி வரைந்து கூறுக. (4) 'எவன்'' என்னும் வினா வினைக் குறிப்பு எவ்வெவ்வாறு விகாரப்பட்டுவரும்? அவற்றைப் பிரயோகிக்கும் விதம்யாது?

VIII. (*a*) மயிர்வினைஞன், சப்தம் ஆகிய இவற்றிற்கு வேறு ஐந்து பிரதிபதங்கள் கூறுக. (*b*) தொகைநிலைத்தொடர்கள் இத்துணைய வெனத் தொகுத்தும் வகுத்தும் காட்டுக. (*c*) தற்குறிப்பேற்றம், மேன்மேலுயர்ச்சி யென்னு மணிகளை யுதாரணமுகத்தான் விளக்குக. (*d*) ஏவல்வினை, முன்னிலைவினை; தொகையுவமை, உவமைத்தொகை: இவை தம்முள் வேற்றுமை யென்ன?

IX. 'கல்வியினும் அறிவுபெருமையது' என்னும் நீதி கற்பிக்குங் கதையினைச்சுருக்கி ஒரு பக்கத்திற்குக் குறையாமற் செவ்விய தமிழ்நடையி லெழுதுக.

---

## சமாசாரக்குறிப்புகள்.

**மாணிக்க வாசகர் காலமும் கடைச்சங்கமும்:**—இப்பெயர் கொண்ட புத்தகம் ஆங்கிலத்தில் வெளியாயிருக்கிறது. இதை ஆக்கியோர் ம-ா-ா-ஸ்ரீ

திருமலைக்கொழுந்துப் பிள்ளையவர்கள், பி. ஏ. இதில் மாணிக்க வாசகருடைய காலத்தை நிர்ணயப்படுத்தும் பொருட்டு அனேக மேற்கோள்கள் எடுத்துக் காட்டப் புகுந்துழி பிரம்மஸ்ரீ சேஷகிரி சாஸ்திரியாரவர்கள் ஆங்கிலத்தில் எழுதிப்பிரசுரித்த தமிழ்க்கவி சரிதத்திலிருந்தும் சில விஷயங்களை வரைந்து அவை தம்புத்திக்கு நேர்ப் படாமையால் தமக்கு எட்டியவாறு அவற்றின் குறைகளைத் தீட்டியிருக் கின்றனர். தமிழ்க்கவி சரிதம் தமிழிலும் மொழிபெயர்க்கப் பட்டு நம்பத்திரிகையிற் பிரசுரமாய் வருகின்றபடியால் அதன் மகிமை பத்திரிகை வாசிப்போ ரனைவருக்கும் விளங்கும். பிள்ளையவர்களின் பிரசுரமும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வந்தால் இருவர் திறத்தையும் உண்மைநாடுந் தமிழறிஞர் உள்ளவாறு கண்டறியக் கூடும். ஆனால் பிள்ளை யவர்கள் புத்தகத்தில் இதற்குமுன் எவராலும் தெள்ளிதிற் றெரியும்படி காட்டப்படாத அனேக நுட்ப விஷயங்கள் மிகுந்த ஆராய்ச்சி செய்து தரப் பட்டிருக்கின்றன வென்பதை "நுனிப்புல்" மேய்வோரும் காணுவர். இப்புத்தகத்தின் விலை அணா 8. இது சென்னைப் புத்தகசாலைகளெவற்றிற் கெழுதினாலும் கிடைக்கும்.

***

**சுகாதார விளக்கம்** :—இதை யாக்கியோர் திருநெல்வேலியிலிருக்கும் டாக்டர் அப்பாவு பிள்ளையவர்களே. இவர் எல். எம். எஸ். பரீக்ஷைகொடுத்து வைத்திய சிகிற்சைகளிற் கைதேறினவராதலால் இவருடைய புத்தகத்தில் அநுபவசித்தியிற்கண்ட அநேக அற்புத விஷயங்களுள. இதில் உடற்கூற்றினைப்பற்றியும் பூச்சிகளாலும் சிற்றுயிர்களாலும் உண்டாகும் வியாதிகளின் இலக்ஷணங்களைப் பற்றியும் அவற்றை நீக்கக் கருதிய வைசூரிப்பால்களைப் பற்றியும், சுத்தமான இடம், காற்று, நீர், உடை, உணக்களைப் பற்றியும், தேகமனோமுயற்சிகளின் தன்மைகளையும் அவற்றின் மிகுதி குறைவால் உடம்பிற்குவரும் துன்பங்களையும்பற்றியும் வெளிப்படையாய்க் கூறப்பட் டிருக்கின்றன. இஃதன்றியும், இப்பொழுது பம்பாய், பெங்களூர் முதலான விடங்களிற் கணக்கற்ற உயிரைக் கொள்ளை கொள்ளும் விஷபேதி, கொள்ளைநோய் இவற்றைப் பற்றி விவரமாய் எழுதப்பட் டிருக்கிறது. இதன் விலை அணா 4. புத்தகத்திலுள்ள விஷயத்தை உத்தேசிக்க விலைசொற்பம். லோகோபகாரத்தின் பொருட்டு விலையைக்குறைத்து ஏற்படுத்தினர் போலும். சென்னையில் தாம்ஸன் கம்பெனியிலும் மற்றும் புத்தகசாலைகளிலும் அகப்படும்.

***

**நளவெண்பா** :—புகழேந்திப் புலவர் செய்த இக்காவியத்தை ம-ா-ா-ஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் சுத்தமாய் நல்ல கடிதத்தில் பரந்த முகவுரை செய்யுள் முதற்குறிப்பகராதியுடன் பிரசுரித்திருக்கின்றனர். இதன்விலை அணா 4. சென்னைத் தாம்ஸன் கம்பெனியில் விலைக்கு அகப்படும்.

கனம். **ஆர்நால்டு ஒயிட்துரையவர்கள்** சென்ற மாசம் 28வ சென்னை ஹைகோர்ட்டுப் பிரதம நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டாரென்று லண்டன் கெஜற்றில் பிரசுரமாகியதை நாளது மாசம் 21வ சென்னை கெஜற்றில் எக்ஸ்ட் ராடினேரியாகக் கவர்ன்மென்ருர் பிரசுரித்திருக்கிருர்கள். இன்று உத்தியோகத்தை யொப்புக்கொண்டனர்.

***

தற்காலத்தில் தமிழ் நாட்டில் பிரபலமாய் விளங்கும் வித்வச்சிரோமணியாகிய ஸ்ரீலஸ்ரீ **சபாபதிநாவலரவர்கள்** தாமிதுகாறுந் தங்கிய சிதம்பர க்ஷேத்திரத்தை விட்டுத் தமிழ்நாடுய்யும் வழிதேடுவதற்கு முக்கிய நிலையமாகிய சென்னைக்கு வந்திருக்கிருர்கள். நாளது மாசம் 17வ ஞாயிற்றுக்கிழமையன்று புரசைப்பாக்கத்தில் ஒரு சிறந்த பிரசங்கஞ் செய்தனர். அவர் செய்த பிரசங்கத்தைக் கவனித்துப்பார்த்தால், அவர் சாதாரணமான வித்வான்களோடு கூட்டவொண்ணுத வித்வ சாமர்த்திய முடையவரென்பதும், ஏனைய சமயப்பிரசாரகர்கள் மதவாதிகள் யாவர்க்கும் கிட்டாத சிறந்த சமரசசுபாவம் அமையப்பெற்றவரென்பதும், இக்காரணங்களால் ஆங்கில மொழிகற்றுத் தமிழிலும் பேரபிமானம் பூண்ட நல்லோர் சபையில் நடுநாயகமாக வீற்றிருக்கத்தக்கவரென்பதும் நன்கு புலப்படுகின்றன. இதற்குதாரணமாக அன்று செய்த பிரசங்கத்தில் வாக்குச்சாதுரியமும் கேட்போரை வசிகரிக்குந் தன்மையும் மிகக்காணப்பட்டன. சைவ வைணவ ஸ்மார்த்த மாத்துவ சமயங்கள் நான்கையும் தம்முட் சமத்துவ முடையனவாகக்காட்டி ஒருசமயவாதி மற்றொரு சமயவாதியைக் கண்டித்து ஏராளமாய்த்தோன்றுந் துண்டுப்புத்தகங்களைக் கடிந்துபேசினுர். அவர் சொல்லியதிலிருந்து, இனி யவர் சென்னையையே தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டு சர்வசமய பரிபாலனஞ் செய்ய வுத்தேசித்திருக்கின்ருரென்றும், அதற்குப் பண்டிதருதவியும் மற்றையோருதவியும் அவருக்கு அத்தியாவசியமென்றும், அப்பரிபாலனந்தான் பிரசங்க ரூபமாயும் சிறு புத்தகரூபமாயும் சமயவாதங்களா லன்றிச் சமயபோதத்தால் நடத்தப்படுமென்றும் அறிகிருேம். இப்பெரியோரது முயற்சி ஈசுரானுக்கிரகத்தாற் சித்திக்குமாயின் தமிழ்நாடு உய்வதிற் றடையேயில்லை. தமிழ்நாட்டாரி லொவ்வொருவரும் அம்முயற்சி கடைக்கூடுதலிற் றம்மாலியன்ற வுதவிசெய்தல் இவர்களுக்குச் சிறந்த தருமமாகும்.